இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 திருவள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி-24 10-11-2005 வியாழக்கிழமை ஓசை-266


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
T.P:0712-610008
(சி-13213)

## நவம்பர் -14 முதல் 20வரை சூழல் மேம்பாட்டுவாரம் கடைப்பிடிப்பு

### - தமிழீழ சூழல் நல்லாட்சிஆணையம் அறிவிப்பு

தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தால் தமிழீழ தேசிய சூழல் மேம்பாட்டுவாரம் கடைப் பிடிக்கப்படவுள்ளது.

நவம்பர்14 ஆம் திகதிதொடக்கம் 20 திகதி வரை இந்தச் சூழல் மேம்பாட்டுவாரம் கடைப் பிடிக்கப்படுகிறது.

இது தொடர்பான வேலைத்திட்டங்களை தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் வெளி யிட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு,

இச்சூழல் வாரத்தின் நோக்கம்:-

சூழல் முன்னோடி தினத்தில் திட்டமிடப் பட்ட நடவடிக்கைகளை முழுமையாகச் செயற் படுத்தல், சீராக அகற்றப்படாமல் காணப்படும் கழிவுகளிலிருந்து தோற்றம் பெறுகின்ற கொடிய தொற்று நோய்களிலிருந்து எமது சமூகத்தைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் படையினரால் சோதனைக்கெடுபிடி அதிகரிப்பு

### - பெண்களும் அவமதிப்பு

வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் தற் போது சோதனை நிலையங்கள் படையினரால் அமைக்கப்பட்டு தமிழ் மக்கள் மீதான சோத னைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரையும் படையினர் துருவித்துருவி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தமிழ் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவிருக் கும் சனாதிபதித்தேர்தலைக் காரணம் காட்டி இவ்வாறான சோதனைகளைப் படையினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றார்கள்.

படையினருடன், பொலிசாரும், நின்றே சோதனை செய்ய வேண்டும் என்று படைத்தரப் புக்கு உத்தரவு போடப்பட்டிருந்த போதிலும் பொலிசார் இன்றியே சோதனை நடவடிக் கைகளில் படையினர் ஈடுபடுகின்றனர். இதே

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-கூட்டமைப்பினர் இன்று சந்தித்துப் பேச்சு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழஅரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர் களுக்கும் தமிழ்தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர் களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று கிளிநொச்சியில் நடைபெற வுள்ளது.

காலை 11.00 மணிக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

### - 72 உயர்தரப் பாடசாலைகளைச் சேர்ந்த -

# உயர்தர மாணவர் பங்கேற்கும் மாணவர் எழுச்சி மாநாடு

## குடா நாட்டில் நாளை நடைபெற ஏற்பாடு

(வலிகாமம்)

*தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள 72 உயர் தரப்பாடசாலை களில் தெரிவு செய்யப்பட்ட 1500 மாணவர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் " மாணவர் எழுச்சி மாநாடு" நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.*

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ் .மாவட்டத்தலைவர் ப. குணேந் திரன் நேற்று மாலை 6.30 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை யின் யாழ்.அலுவலகத்தில் நடை பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன் றிலேயே மேற்படி தகவலைத் தெரி வித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரி வித்த குணேந்திரன் மேலும் தெரி வித்ததாவது:-

வடக்கு- கிழக்கிலேயே மாணவர் கள் ஒன்று கூடி மாநாடு ஒன்றை நடாத்தி தங்கள் பிரச்சினைகளைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகள் மீசாலையில் பறிமுதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ் தென்மராட்சி மீசாலைப்பகுதி யில் வைத்து ஒருதொகுதி வாக் காளர் அட்டைகள் இனம் தெரியாத நபர்களினால் பறித்துச்செல் லப்பட்டுள்ளன. எதிர்வரும் சனா திபதித்தேர்தலில் வாக்காளர்களைப் பங்கு கொள்ளச் செய்வதற்காக யாழ். குடாநாடெங்கிலும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் பதவி விலகல்!

(கொழும்பு)

சிறிலங்கா சமாதானச் செயல கப் பணிப்பாளர் ஜயந்த தனபால அப்பதவியிலிருந்து விலகியுள் ளார். அவரது விலகல் கடிதத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டுள்ளார். ஜயந்த தன பாலவின் பதவிவிலகல் தகவலை சமாதான செயலகப்பேச்சாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுத்தாக்குதல்!

வவுனியாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் மீது நேற்று முன்தினமிரவு கைக்குண்டுத் தாக்கு தல் நடாத்தப்பட்டுள்ளது. இரவு 10.30மணியளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என வவுனியாப் பொலிசார் தெரிவித்துள்ளனர். கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாரும் கைது செய்யப் படவில்லை எனப்பொலிசார்.தெரி வித்தனர். (10)

## ஆக்கிரமிப்பாளருக்கெதிரான இனிவரும் யுத்தம் மாதக்கணக்கில் நீடித்துக்கொண்டிருக்காது

### - துணைப்படை அணி பயிற்சி நிறைவு நிகழ்வில் தளபதி விநாயகம்

சிறிலங்கா ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான இனிவரும் யுத்தம் மாதக் கணக்கிலோ, வருடக்கணக்கிலோ நீடித்துக்கொண்டு இருக்காது என்று தமிழீழக் கடற்படையின் தளபதி களில் ஒருவரான விநாயகம் எச் சரிக்கை விடுத்துள்ளார்.

லெப். கேணல் நாவரசன் தமிழீழ கடற்படை துணைப்படைப்பயிற்சிப் பாசறையில் 120 பேரைக்கொண்ட 3 ஆம்அணி பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முற்பகல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழக் கடற் படை தளபதிகளில் ஒருவரான விநா யகம் ஆற்றிய உரையில்;

தமிழீழம் என்ற இலட்சியக் கோட் பாட்டிலே உரிமைகளை வென்றெடுப் பதற்காக, உரிமைப் போராட்டத்தில் தோளோடு தோள் நின்று பரந்து விரிந்துகிடக்கும் கடலில் எதிரிக ளைத் துரத்துவோம் என்று வீரத்தோடு இப்பிரதேசத்தில் வாழுகிற நீங்கள் துணைப்படைப் பயிற்சிகளை மேற்கொள்ள வந்துள்ளீர்கள். உங்க ளுக்கு தமிழீழக்கடற்படையின் சார்பில் எமது புரட்சிகர வணக்கங் கள். (12ஆம் பக்கம் பார்க்க)

## மலையக அபிவிருத்திக்கு நிதியொதுக்க மறந்துபோன அமைச்சர் அமுனுகம!

(கொழும்பு)

நேற்று முன்தினம் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில் மலையக அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்ய நிதியமைச்சர் சரத் அமுனுகம மறந்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. மலையக அபி விருத்தி அதிகாரசபைக்கு 463 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் (12ஆம் பக்கம் பார்க்க)

## தீவகக் கடலில் வெடிவிபத்து மீனவர் பரிதாப மரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகக்கடற்பரப்பில் இடம்பெற்ற "டைனமற்" வெடிவிபத்தில் மீனவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று நண்பகல் பாலை தீவை அண்மித்த கடற்பரப்பில் இடம்பெற்ற இவ்விபத்தில் குருநகரைச்சேர்ந்த முடியப்பு- மரியதாஸ் (வயது-50) என்ற கடற்றொழிலாளியே உயிரிழந்தவராவார். பாலைதீவை அண்மித்த கடற்பரப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு நடவடிக்கை ஆரம்பம்



தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்புக்குத்தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடன் மீளளிப்பு நேற்று முகமாலையில் ஆரம்பமாகியுள்ளது.காலை 8.30 மணிக்கு இந்த நடவடிக்கை ஆரம்பமானது.இவ்வாறு மீளளிக்கத்தெரிவு செய்யப்பட்டவர்களில் யாழ். மாவட் (12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளரின் 10 யோசனைகளுக்கு சிறிலங்கா உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட பத்து யோசனைகள் அடங்கிய திட்டத்தை அமுல்செய்ய உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

வடக்குகிழக்கின் கட்டுப்பாடற்ற பிரதேச வாக்கா ளர்களுக்காக அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக் களிப்பு மையங்களின் நிமித்தமே இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இலங்கை முற்போக்கு முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் நெல்சன் பெரேரா தாக்கல் செய்த மனுவின் மீதான இடைக்கால தீர்ப்பு ஒன்றின் அடிப்படையில் இந்த அனுமதியை மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழு வழங்கியது.

கொத்தணி வாக்குச்சாவடிகளானது அரசாங்கக் கட்டுப்பாடற்ற பகுதியின் எல்லையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைக்கப்படவேண்டும் என தேர்தல் ஆணையாளர் தமது யோசனையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை நிராகரித்த உயர்நீதிமன்றம் குறித்த கொத் தணி வாக்குச் சாவடிகள் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி உதவியாணையாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கிற்கு உட்பட்ட அனைத்து மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவியாணையாளர்களுக்கான கழிவகற்றும் முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான செயலகத்தில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலானது காலை பத்து மணியளவில் ஆரம்பமானது.

இக்கலந்துரையாடலில் தொடர்ச்சியாக திண்மக் கழிவுகளை அகற்றும் வழிமுறைகள் தொடர்பாகவும், அடுத்த வாரம் தொடக்கம் நடாத்த இருக்கின்ற சூழல் மேம்பாட்டுவாரம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 11.30 மணிக்கு ஒவ்வொரு மாவட்டத்தின் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் 2006 ஆம் ஆண்டிற்கான அனைத்து அபிவிருத்



தித திட்டங்கள் தொடர்பாகவும் எட்டு மாவட்டத்திற்கும் நீண்டகால அபிவிருத்தி தொடர்பாக முழுமையான திட்டங்களைத் தயாரித்து ஒரு நெறிமுறைக்குக் கொண்டு செல்லுதல் போன்ற விடயங் களின் தலைப்பில் கலந்துரையாடப்பட்டது. மேற்படி இரு கலந்துரையாடல்களிலும் திட்டமிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் ரஞ்சன் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், சின்னப்பு மாஸ்ரர், செல்வின் ஆகியோர் கருத்துக்களை வழங்கினர். அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாகவும், நிறை வேற்றப் படாத வேலைத்திட்டங்கள் குறைபாடுகள், செயற்பாடுகள் பற்றியும் பிரதித் திட்டப் பணிப்பாளர்கள் எடுத்துக் கூறினார்கள். (கு)


## வரிவிளம்பரம்

### Wep Site Designing

உங்களது வியாபார நிறுவனங்களை சர்வதேச ரீதியில் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்திடவும்,வியாபார நிறுவனத்தின் பெயரில் **இணையத்தளங்களை பதிவு செய்து உருவாக்கிடவும்**

***தொடர்புகட்கு:***

வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி,கிளிநொச்சி (சி.13074)

### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள பென்ரியம் IV கணினி டொட்மற்றிக்பிறிண்டர் (Epson 1120-A4) லெமனேற்றிங் மிசின் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு ICS கணினி பயிற்சிநிலையம், இலங்கை வங்கி அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி. பார்வையிடும் நேரம் மாலை 5.00 - 8.00மணிவரை. (6917)


# காணிப்பிரச்சினைகளைத் தீர்க்க கரைச்சி பிரதேசத்தின் நடமாடும்சேவை

(அலுவலகசெய்தியாளர்)

கரைச்சிப்பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் நடமாடும் சேவைகள் மூலம் கரைச்சிபிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காணிப்பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் இன்று கிளிநொச்சி விவேகானந்தநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00மணிவரை விவேகானந்தநகர் கிராமமக்களின் காணி விசாரணைக்கூட்டமும், நாளை காலை 9.00மணிமுதல் பிற்பகல் 4.00மணி வரை உதயநகர் கிழக்கு, மேற்கு மக்களுடைய காணி விசாரணைகள் அந்தந்த கிராம அபிவிருத்திச்சங்க மண்டபங்களில் நடைபெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செஹ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

# உரத்தின் விலை மாற்றம்

நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப்பகுதியினரால், யாழ்., வன்னிப் பகுதிகளில் வேளாண் இடுபொருள் வாணிபர்களுக்கு உரத்தின் விலை மாற்றம் பற்றிய அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி ஹேறலீஸ் நிறுவனத்தால் ஆக்கப்பெறும் உரங்களுக்கான ஆகக்கூடிய விற்பனைவிலை கீழ்வருமாறு தீர்மானிக்கப்பெற்றுள்ளது. குறித்த உரங்களை 2005 .11. 10 ஆம் நாளிலிருந்து அவ் விலையில் விற்பனை செய்யுமாறு யாழ். , வன்னிப்பகுதி வேளாண்இடுபொருள் வாணிப உரிமையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

| தொ. எண். | உரத்தின் பெயர் | வன்னிப்பகுதி விற்பனை விலை | யாழ்.மாவட்ட விற்பனை விலை |
|---|---|---|---|
| 0 1 | யூரியா (50 கிலோக்கிராம்) | 656.00 | 677.00 |
| 0 2 | அமோனியா (50 கிலோக்கிராம்) | 1,391.00 | 1,412.00 |
| 0 3 | வி-01 (50 கிலோக்கிராம்) | 1,638.00 | 1,659.00 |
| 0 4 | ரீ.எஸ்.பி. (50 கிலோக்கிராம்) | 1,824.00 | 1,845.00 |
| 0 5 | ரீ.டி.எம். (50 கிலோக்கிராம்) | 1,160.00 | 1,181.00 |
| 0 6 | எம்.ஓ.பி. (50 கிலோக்கிராம்) | 1,772.00 | 1,793.00 |

# பொன்னம்பலம் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் குழந்தை மருத்துவ நிபுணர் பேராசிரியர் வைட்கோல் வாரந்தோறும் செவ்வாய்,வியாழக் கிழமைகளில் நோயாளர்களைப் பார்வையிடவுள்ளதால் இருதயநோயுடைய குழந்தைகள், பிறகுறைபாடுள்ள குழந்தைகளை முன்னமே காட்டி பதிவினை மேற்கொண்டு சிகிச்சையின் பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றார்கள் இன்று காலை 9.00-2.00மணிவரை நோயாளர்களைப் பார்வையிடவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (தீலோ)


# கிளிநொச்சியில் உயர்கற்கை நெறியை கற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு...

கல்வி,தொழில் வாய்ப்புக்களுக்காக பிற மாவட்டங்களுக்கு அலையத் தேவையில்லை.
உங்கள் அருகில் உயர் கற்கை நெறிகள்.....



தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முகாமைத்துவக் கல்லூரியினால்
GAQ (BA)
B.COM கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2004இல் க.பொ.த. [உ/த] பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் க.பொ.த. [உ/த] பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பங்கள் 20.11.2005ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவேண்டும்.

கற்கை நெறிகள் சனி,ஞாயிறு ஆகிய நாட்களில் மட்டுமே நடைபெறும்.

கற்கை நெறிகளிற்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களே சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதால் மேலதிக விபரங்களிற்கும், விண்ணப்பப்படிவங்களிற்கும் முகாமைத்துவக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நிர்வாகம்,
முகாமைத்துவக் கல்லூரி,
கராடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

(சி-13324)

# பணிநிலை வேண்டுகை

## சுத்திகரிப்பாளர்

புதுக்குடியிருப்பில் இயங்கும் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் ஆண்,பெண் சுத்திகரிப்பாளர்களுக்கான வெற்றிடம் உள்ளது. இதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிதொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை நடைபெறும்.

மேற்படி பணிக்குத் தகைமையுடையோர் எதிர்வரும் 15.11.2005 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மருத்துவமனை பணிமனைக்கு நேரில் சமுகம்தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பணிப்பாளர்,
சத்திரசிகிச்சை நிபுணர்,
பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை,
புதுக்குடியிருப்பு.

(சி.13267)


# 10 ஆம் ஆண்டு நினைவு



## லெப். செங்கோலன்
## (கந்தசாமி கிருபாகரன்)

மண்ணில் - 1976 - 02 - 23
வீரச்சாவு- 1995 . 11 . 10

தானைத் தலைவன் வழியில் சென்று
தன் உயிர் ஈந்த மாவீரனே
தசாப்த ஆண்டுதான் ஆனாலும்
தரணியில் உன் நினைவு மாறாது.

பல ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவுகள் எம்மைவிட்டுச் செல்லாது. உன்பிரிவால் என்றுமே துயர் பகிர்வோம் நாம்.

தகவல்-
யாழ்ப்பாணம். (6914) குடும்பத்தினர்.

# ஊரடங்கு உத்தரவையும் மீறி பரிஸ் கலவரம் தொடர்கிறது

## நேற்று மட்டும் 3000 கார்கள் எரிப்பு

(பரிஸ்)

**பிரான்சின் பரிஸ் நகரம்மற்றும்அதன் புற நகர்ப்பகுதிகளில் சிறுபான்மை ஆபிரிக்கர்கள் கலவரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். பொலிசாருக்கு அஞ்சி மின்நிலையத்திற்குள் புகுந்த இரண்டு ஆபிரிக்க இளைஞர்கள் பலியானதைக் கண்டித்தும் சிறுபான்மை ஆபிரிக்கர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுவதைக் கண்டித்தும் இந்தக் கலவரம் நடக்கிறது. நேற்று 13 ஆவது நாளாக நடந்த இந்தக்கலவரத்தில் 3000 இற்கும் மேற்பட்ட கார்கள் எரிக்கப்பட்டன. கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பரிஸ் நகர நிர்வாகம் திணறுகிறது. இந்தக்கலவரம் இப்போது மற்ற நகரங்களுக்கும் பரவுகிறது.**


சில இடங்களில் இனக்கலவரம் உருவாகியும் வருகிறது. இதைத் தொடர்ந்து பரிஸ் மற்றும் அதன் புற நகரப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இரவுநேர ஊரடங்கு உத்தரவாதம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. பொலிசாருக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. இதுவரை 330 இற்கும் மேற்பட்டவர்களைப்பொலிசார் கைதுசெய்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் பரிஸ் நகரம் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் கலவரக் காரர்கள் பள்ளிக் கூடங்கள்மீது வெடிகுண்டுகளை வீசுகிறார்கள். இதனால் பாடசாலைகளுக்குச் செல்லவே மாணவர் பயப்படுகிறார்கள்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் ஆயிரத்து 173 வாகனங்களுக்கு கலவரக் காரர்கள் தீ வைத்தனர். இது தொடர்பாக 330 பேர்கைது செய்யப்பட்டனர்.

கலவரக்காரர்கள் பொருட்களை வீசி எறிந்து தாக்கியதில் 12 பொலிசார் காயமடைந்தனர்.





குயின்மேரி 2 என்ற மிகப்பெரிய உல்லாச கப்பல் ஜெர்மனியின் ஹம்பர்க்துறைமுகத்தை யடைந்தது.

# எலி புகுந்ததால் பயணம் இரத்து

செக் குடியரசு நாட்டின் பயணிகள் விமானம் ஒன்று ஜெர்மனியிலுள்ள பிராங்பர்ட் நகரில் இருந்து பிரேக் நகருக்குப் புறப்பட இருந்தது. அந்த விமானத்தில் எலி ஒன்று புகுந்தது. அதைக் கண்டுபிடித்து ஊழியர்களால் அகற்ற முடியவில்லை. எலியுடன் பயணிகள் பயணம் செய்வது ஆபத்தானது என்பதால் அந்தப் பயணம் இரத்துச்செய்யப்பட்டது.

விமானம் பயணிகள் இல்லாமல் ஊழியர்களுடன் மட்டும் பிரேக் நகருக்கு திரும்பியது. பிரேக் நகரில் எலி கண்டுபிடித்து அகற்றப்பட்டது.



ஈராக்கிலிருந்து 11 மாதங்களுக்குப் பின் நாடு திரும்பிய அமெரிக்க இராணுவ வீரர் தன் மகளைக்கட்டியணைத்து மகிழ்கிறார்.

# சதாம் ஹுசைன் தரப்பின் மேலும் ஒரு வழக்கறிஞர் சுட்டுக்கொலை

(பாக்தாத்)

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் உட்பட ஏழு பேர்மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு. பாக்தாத் நீதிமன்றில் விசாரணை கடந்த (ஒக்ரோபர்) மாதம் தொடங்கியது. சதாம் ஹுசைனின் சார்புடையோரின் வழக்கறிஞர் ஜனாபி அவரது அலுவலகத்தில் இருந்த போது, கடந்த மாதம் 20 ஆம் திகதி அவரைச் சிலர் கடத்திச் சென்று சுட்டுக்கொன்றார்கள்.

இந்த நிலையில் சதாம் ஹுசைனுக்காக நீதிமன்றில் ஆஜராகும் வழக்கறிஞர் குழுவைச்சேர்ந்த வழக்கறிஞர்கள் அடில்-அல்-ஜுபெய்டி,தாமெர் ஹமவுட் அல் குஜைய் ஆகிய இருவரும், மேற்கு பாக்தாத்தில் ஒரு காரில் போய்கொண்டிருக்கையில் இனந்தெரியாதோர் கார் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார்கள். இதில் அடில் -அல்-ஜுபெய்டி மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்து காருக் குள்ளேயே இறந்தார். இன்னொரு வழக் கறிஞர் தாமெர்ஹமவுட் அல் குஜைய் மீது துப்பாக்கிக்குண்டு பாய்ந்து படுகாயமடைந்தார். சதாம் ஹுசைனின் வழக்கறிஞர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்படுவதால், சதாமின் மற்ற வழக்கறிஞர்கள் அச்சத்துடன் இருக்கிறார்கள். இதனால் வழக்கு விசாரணையை வெளிநாட்டில் நடத்துமாறுகோர ஆலோசனை செய்து வருகிறார்கள்.

# பின்லேடன் ஆதரவு தீவிரவாதிகள் அவுஸ்திரேலியாவில் கைது

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் பின்லேடன் ஆதரவு தீவிரவாதிகள் 17 பேரைப் பொலிசார் கைது செய்தனர். அவர்களில் ஒருவர் பொலிசாரால் துப்பாக்கியால் சுட்டுப் பிடிக்கப்பட்டார்.

அவுஸ்திரேலியாவில்தீவிரவாதத்துக்கு எதிராக கடுமையான சட்டம் கடந்த ஒரு வாரத்துக்கு முன்புதான் கொண்டுவரப்பட்டது.

தீவிரவாதிகள் அவுஸ்திரேலியாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக உளவுத் துறைக்குத்தகவல் கிட்டியிருப்பதாக அந்த நாட்டுப் பிரதமர் ஜான் ஹோவார்ட் கடந்த வாரம் அறிவித்தார்.

இந்நிலையில் சிட்னி,மெல்போர்ன் நகரங்களில் உள்ள வீடுகளில் பொலிசாரின் திடீர் சோதனை நடந்தது.இதில் 17 பேர் கைது செய்யப் பட்டனர் இந்த 17 பேரும் அல்கைதா அமைப்புடன் தொடர்புடையவர்கள். இவர்களில் எட்டுப்பேர் சிட்னியில் கைது செய்யப்பட்டனர்.

மெல்போர்னில் கைதான ஒன்பது பேரில் ஒருவர் மதகுரு ஆவார். அபு பக்கர் என்ற அவர் பின்லேடனின் ஆதரவாளர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

சிட்னியில் ஒரு வீட்டில் சோதனையிடச் சென்ற போது அங்கு பதுங்கி இருந்த தீவிரவாதி பொலிசாரை நோக்கிச் சுடத் தொடங்கினார். இதில் ஒரு பொலிஸ் அதிகாரி காயமடைந்தார். பொலிசார்திரும்பத் தாக்கியதில் அவர் காயமடைந்தார். அவரைக் கைது செய்துமருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

# படகு கவிழ்ந்து இருவர் பலி

(டாக்கா)

வங்காளதேசத்தில் சிட்டகொங் அருகே உள்ள தீவில் இருந்து சிட்டகொங் நகருக்கு 150 பேருடன் சென்றுகொண்டிருந்த படகுதிடீரென்று கடலில் மூழ்கியது. இதில் இருந்த 128 பேரைக் கடலோரக் காவல்படையினர் மீட்டனர்.ஒரு குழந்தை உட்பட இரண்டு பேர் பலியானார்கள். அவர்கள் உடல்களும் கைப்பற்றப்பட்டன. 20 பேர் கதி என்ன என்பது தெரியவில்லை. அவர்கள் கடலில் மூழ்கினார்களா? அல்லது தப்பிப் பிழைத்தனரா என்பது தெரியவில்லை.

# மலேசியாவில் 16 நாடுகளின் மாநாடு

மலேசியாவில் கிழக்கு ஆசிய நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் புருனே, கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ்,மலேசியா, மியான்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்ஆகிய பத்து நாடுகளும் இந்தியா, சீனா, ஜப்பான், வடகொரியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் கலந்துகொள்கின்றன. அடுத்த மாதம் (டிசம்பர்) நான்காம்திகதி இந்த மாநாடு தொடங்குகிறது. இதில் இந்தியா சார்பில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்கிறார்.



பாட்னாவில் உள்ள சூரியனார் கோவிலில் சாத் திருவிழா நடைபெறுகிறது. இதில் சூரிய கடவுளுக்கு பிரசாதம் தயாரிக்க பெண்பக்தர்கள் கங்கையிலிருந்து புனித நீர் எடுத்துச்செல்கின்றனர்.

# ஈராக்கில் பன்னாட்டு படைகள் அடுத்த ஆண்டும் நிலைத்திருக்கும்

—ஐ. நா. அறிவிப்பு

ஈராக்கில் நிலை கொண்டுள்ள பன்னாட்டுப்படைகளை அடுத்த ஆண்டு இறுதிவரை அங்கு நிறுத்த ஐக்கியநாடுகள் சபை தீர்மானித்துள்ளது.

ஈராக்கில் உறுதியான அரசியல்நிலை மாற்றங்கள் ஏற்படும் வரை பன்னாட்டுப்படைகள் நிலைகொள்வது அவசியம் என ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை தீர் மானித் துள்ளது. இதற்கு அங்கத்துவ நாடுகளின் அங்கீகாரமும் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை தெரிவித்துள்ளது.

2006ஆம் ஆண்டு இறுதிவரை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படைகளை ஈராக்கில் நிலை நிறுத்தும் தீர்மானத்திற்கு ஐ.நா. பாதுகாப்புச்சபை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளனர் இத்தீர்மானத்தின்படி ஈராக்கில் நிலைகொண்டுள்ள சுமார் ஒரு இலட்சத்து 78 ஆயிரம் படையினர் தொடர்ந்தும் அடுத்த வருட இறுதிவரை அங்கு கடமையில் ஈடுபத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கில் ஒருஇலட்சத்து 57ஆயிரம் அமெரிக்கப் படையினரும் 8500 பிரித்தானிய படையினரும் 21500 பல்தேசியப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.முன்னதாக இவ்வாண்டுடன் ஈராக்கிலிருந்து பல்தேசியப்படையினரை வெளியேற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை முன்னர் இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசியத்தலைவரின் வழி நடத்தலினால் தமிழர் நாம் தலைநிமிர்ந்து நிற்கின்றோம்

## -மட்டு.மாவட்ட கல்விக்கழகத்துணைப் பொறுப்பாளர்

(மட்டக்களப்பு)

தேசியத் தலைவரின் வழி நடத்தலினால் தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். இவ்வாறு தமிழீழ கல்விக் கழகத்தின் மட்டு. மாவட்ட துணைப் பொறுப்பாளர் தாயகன் தெரிவித்தார்.

மட்டு. பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட் கிழமை காலை நடைபெற்ற தண் ணீர்த் தாங்கி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

பாடசாலை அதிபர் முருகேசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்;

போர் நிறுத்தம் கைச்சாத்திடப் பட்டு மூன்றரை வருடம் கடந்து விட்ட போதிலும் கூட பலனேதுமளிக் காது ஆபத்தான நிலைக்கு தள்ளப் பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் மீதும், போராளிகள் மீதும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரும், தேசவிரோதக் கும்பல்களும் நிழல் யுத்தத்தைக் தொடுத்துக் கொண்டு வருகின்றனர். இது வெகுவிரைவில் நிஜயுத்தமாகி விடும் என்றார்.

இதற்கிடையில் சிறிலங்கா அரசு தேர்தல் களத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தக் காலத் தில் தமிழர்களாகிய நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டும் தேசியத் தலைவரின் வழி நடத்தலினாலேயே தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து நிற்கிறோம்.

தேர்தலுக்குப் பின் நிகழப் போகும் சம்பவங்களை மக்கள் எதிர்பார்த்த நிலையிலும், எதிர்வரும் 27ஆம் திகதி எமது தேசியத் தலைவரின் உரை யினை எதிர்பார்த்து சர்வதேச சமூகத் தினரும் இருக்கின்றனர் என்றார்.

பட்டிருப்பு வலயத்திலுள்ள முதன் மைப் பாடசாலைகளுள் பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயமும் ஒன்று. இப்பாடசாலையில் பல்வேறு நிகழ்வுகள் மக்களால் ஏற்படுத்தப் பட்டு அவை கல்வியை மேம்படுத்து வதாக அமைந்திருக்கின்றன.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மா.உலகேஸ்வரன் தண் ணீர்த் தாங்கி வழங்குவதற்கு நிதி யுதவி அளித்த லண்டனைச் சேர்ந்த பிரபாகரன் குடும்பம் மற்றும் ஆசிரி யர், மாணவர்கள் கலந்துகொண்டனர்.



வவுனியா, மன்னார், இந்தியா நலன்புரிநிலையங்களிலிருந்து கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பகுதியில் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கு வதற்கு பாஜ் நிறுவனத்தினால் நேற்று முன்தினம் உணவற்ற பொருட்கள் பாரவூர்தியிலிருந்து இறக்கப்படுவத னைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

# இ.மி.சபை ஊழியருக்கு விடுதி அமைக்க கிளிநொச்சி நகரில் கால் ஏக்கர் நிலம்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை மின்சாரசபை ஊழியர் விடுதி அமைப்பதற்கென கால்ஏக்கர் நிலப்பரப்பு கிளிநொச்சி புதியநகரத்திட்ட மத்திய பகுதியில் வழங்கநடவடிக்கை மேற் கொள்ளப்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்க காரியாலயத்திற்கு வழங்கப்பட்ட காணிக்கருகாமையில் மேற்படி மின்சாரசபை ஊழியர் விடுதி அமைப்பதற்கென கால் ஏக்கர் காணியினை ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கிளி.அரசஅதிபர் தி.இராசநாயகம் கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜினிக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.


மின்சாரசபை அதிகாரி முதல் ஊழியர்கள் வரை தற்போது சிறிய தற்காலிக கட்டடமொன்றிலிருந்தே கடமைமேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி.நகரத்தினை அண்டியபகுதிகளுக்கு மின்சாரம் வழங்க துரித நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரத்தினை அண் டிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கு வதற்கான நடவடிக்கைகளை கிளி நொச்சி மாவட்ட இலங்கை மின்சார சபையினர் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி டிப்போ சந்தியிலி ருந்து கோணாவில் நோக்கி ஐந்து



கிலோமீற்றர் தூரத் திற்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பெற்று வேலைகள் யாவும் பூர்த்தி யடையும் நிலை யிலுள்ளமை குறிப் பிடத்தக்கது.

மேற்படி பகுதி க்கு மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின் கம்பிகள் பொருத் தப்பட்டுள்ளதுடன் நேற்று முன்தினம் மின் மாற்றிகளும் பொருத்தப்பட்டுள் ளன. இன்னும் சில தினங்களில் மேற்படி பகுதிக்கு மின்சாரம் வழங்கப் படுமென இலங்கை மின்சாரசபை யினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# பனை அபிவிருத்தி சபை நிதியுதவியுடன் பனம்விதை நடுகைத்திட்டம்

(விசுவமடு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய கல்லாற்று கிரா மத்தில் பனை அபிவிருத்திச் சபை யின் நிதியுதவியுடன் பனம்விதை நடுகைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த மூன்றாம் திகதி கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராச நாயகம் தலைமையில் பனம் விதை நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் தமிழீழநிர்வாகசேவை துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், கரைச்சிப் பிரதேச சபை செயலர் குலேந்திரன், கண்டாவளைப்பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதன், சேவாலங்கா நிறு வனப்பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

12,000 பனம் விதை நாட்டிவைக் கப்பட்டுள்ளன. இதேவேளை உமை யாள்புரம் கிராமத்தில் 20,000 ஆயிரம் பனம் விதைகளும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஞானிமடம், சிந்தன் குறிச்சி கறுக்காய்தீவு ஆகிய இடங் களிலும் பனம்விதை நடுகை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இயக் கச்சி, புலோப்பளை, மாசார் ஆகிய கிராமங்களிலும் பனம் விதைநடுகைத் திட்டம் மேற்கொள்ளப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட பனைஅபிவி ருத்தி சபை இணைப்பாளர் வி.கே. மாணிக்கம் தெரிவித்துள்ளார். (46)

# 459 கட்டாக்காலி நாய்கள் கிளிநொச்சியில் அழிப்பு

(அலுவலக செய்தியாளர்)

பலத்த நெருக்கடியின் மத்தியில் கடந்த மாதம் 24ஆம் திகதி வரை யும் 459 கட்டாக்காலி நாய்களை அழித்தமை சிறப்பானது என கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தெரி வித்துள்ளார்.

கிளி.அரச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அத்தியா வசிய சேவைகள் குழுக்கூட்டத்தில் வைத்து அவர் இதனைத் தெரிவித் தார்.

எமது மாவட்டத்தில் கட்டாக் காலி நாய்களின் பெருக்கம் அதி கரித்துள்ளது. இதனை நாம் கட்டுப் படுத்த வேண்டும்.

இதற்கான செயற்பாடுகளை உள்ளூராட்சித்திணைக்களம் ஊடாக மேற்கொண்டு வருகிறோம். தெரு நாய்களை அழிக்கின்ற நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ள பணியாளர் கள் கடந்த வாரம் மோசமாகத் தூக்கப்பட்டிருந்தார்கள்.

இனிவரும் காலங்களில் தெரு நாய்களை அழிப்பதற்காகச் செல் லும்போது அந்தப்பகுதி கிராமசேவ கர்கள் உள்ளூராட்சி அலுவலர்கள் ஆகியோரும் இணைந்து செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார். (லோ.தீ)

# மட்டக்களப்பில் தொடர்மழை குடியிருப்புக்கள் வெள்ளத்தில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை கார ணமாக மட்டக்களப்பின் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ள துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக வாழும் அகதி முகாம்களும் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட டச்பார், நாவலடி, திருச்செந்தூர், புதுமுகத்து வாரம் ஆகிய பகுதி மக்கள் குடி யமர்த்தப்பட்டுள்ள திராய்மடு நலன்புரி நிலையம் முற்றாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு சுமார் 1200 குடும்பங்கள் குடியமர்த்தப்பட் டுள்ளன.

ஒல்லிக்குளம், வாகரை, ஏறாவூர், மடம், உட்பட பல அகதி முகாம்களி லும், முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள் ளது. கடந்த ஏழு நாட்களில் மட்டக் களப்பு மாவட்டத்தில் 235.3 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி கே.சூரியகுமார் தெரி வித்துள்ளார்.

மழை வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுள்ள திராய்மடு அகதிகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு தொண்டர் நிறுவனங்கள் நடவடிக் கைகளை எடுத்து வருகின்றன.

# மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பாக வர்த்தகர்களுடனான கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் துணுக்காய் வர்த்தகர்களுடனான மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை பத்துமணிக்கு, துணுக்காய்ப் பிரதேச செயலர் கேட்போர் கூடத்தில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவீரர் நாளை மிகவும் சிறப்பாக நடத்துவதற்கும் ஒழுங்கு படுத்துவதற்கும் மாவீரர் நாள் நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற் கும் சில வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்களை சூட்ட இருப்பது தொடர்பாக வும் அவர் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் கருத்துரைகளை அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன், தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் சிவா, கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் வழங்கினர். (24)

# சேனைப்பயிர்ச் செய்கையில் வவுனியா விவசாயிகள் ஆர்வம்

(வவுனியா)

வவுனியாவில் பெரும்போகப் பயிர்ச்செய்கை இடம்பெற்று வரு கின்ற நிலையில் சேனைப் பயிர்ச் செய்கையும் இடம் பெற்று வருகின் றது. வவுனியா கல்மடு பிரதேசத்தில் இவ்வாறான சேனைப் பயிர்ச் செய்கை இடம்பெறுகின்றது. யுத்தம் காரணமாக பல ஆண்டு காலமாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்த இப்பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்கள் இப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெற்செய்கைக்கான பசளை, மருந்து வகைகளின் விலை அதி கரித்துள்ளதைத், தொடர்ந்து நெற் செய்கை மூலம் இலாபம் அடையமுடி யாத சூழல் இருப்பதனால் இவ்வா றான பயிர்ச்செய்கை மூலம் உழுந்து, பயறு, கௌப்பி போன்ற பயிர்களை பயிரிட உள்ளதாகவும், இதனால் கூடுதலான இலாபம் கிடைக்கும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின் றனர்.

இதேவேளை வவுனியா விவ சாயிகள் தற்போது இவ்வாறான பயிர்ச் செய்கையில் ஆர்வம் கொண்டுள் ளமை பல இடங்களிலும் தற்போது காணக்கூடியதாக உள்ளது. தற் போது பரவலாக மழை பெய்து வரு வதனால் சேனைப்பயிர்ச் செய்கை மூலம் விவசாயிகளின் பொருளாதாரம் மேன்மையடையும் என்றும் இப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயி கள் தெரிவிக்கின்றனர்.

# தட்டுவன் கொட்டிக் கிராமத்தில் இலவச மருத்துவசேவை

தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் நேற்று ஏ-9 வீதியிலிருந்து குறைந்தது ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதும், எதுவித சுகாதார வசதிகளும், போக்குவரத்து வசதிகள் அற்றதும் மிகவும் பின்தங்கிய கிராமுமான தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் இலவச மருத்துவ சேவை நடைபெற்றது. இதில் சிகிச்சையும், பல்நோயினை ஆரம்பத்திலேயே இனங்காண்பதற்கான விபரணப்படக் கண்காட்சியும், வீடியோ படக்காட்சியும்மற்றும் வாய்ப்புற்று நோய், சலரோகம், உயர் குருதியமுக்கம் என்பனவற்றை இனங்காண் பதற்கான பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டதுடன், மழைக்கால தொற்றுநோய் விழிப்புணர்வுச் செயற்பாடாக சுகாதாரக் கல்வியும் வழங்கப்பட்டது.

# யாழில் கடற்றொழிலாளர்களின் தொழில்தரத்தை மேம்படுத்த உதவி

(தீவகம்)

யாழ்.தீவகம் மற்றும் வலிகாமம் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில்தரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் முதற்கட்டமாக இப்பகுதி மீன்வர்களுக்கான சுழற்சி முறைக்கடன் திட்டம் ஒன்று ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தித்திட்டத்தின் நிதி உதவியுடன் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் மற்றும் வலிகாமம் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் ஆகியவற்றினூடாக இக்கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு தொழில்ரீதியாக பின்னடைவுகளைச் சந்தித்துள்ள கடற்றொழிலாளர்களது தொழில்தரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்காகவே இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (33)

# 'பாஸ்' நடைமுறையை அமுல்படுத்தினால் கடற்றொழிலாளர் போராட்டத்தில் குதிப்பர்

## -கடற்றொழிலாளர் சங்கசமாச சம்மேளன செயலாளர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வடமராட்சியில் கடற்றொழிலாளர்களுக்கான பாஸ் நடைமுறையைச் சிறிலங்கா கடற்படையினர் வற்புறுத்தலாக அமுல்படுத்த முனைந்தால் யாழ்.குடாநாட்டு கடற்றொழிலாளர்கள் அனைவரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதிப்பர் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கசமாச சம்மேளனத்தின் செயலாளர் க.சூரியகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்.வடமராட்சி கடற்றொழிலாளர்கள் அனைவரும் கடற்றொழிலுக்குச் செல்வதற்கான பாஸ்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றும் பாஸ் பெறாதவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அறிவித்துள்ள கடற்படையினர் கடற்றொழிலாளர்களுக்கு வலுக்கட்டாயமாகப் பாஸ்களை வழங்குவதுடன் பாஸ்களைப் பெறமறுப்போர் மீது கொலை அச்சுறுத்தல்களையும் விடுத்து வருகின்றனர்.

எனவே யாழ்.மாவட்டக்கடற்றொழிலாளர்களை மிரட்டி அவர்களது சுதந்திரமான தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ய முயலும் படையினரது பாஸ்நடைமுறைகளை ஏற்க முடியாது.

வலுக்கட்டாயமாகப் பாஸ் நடைமுறையைக்கொண்டு வந்தால் அதனை எதிர்த்து கடற்றொழிலைப் பகிஷ்கரித்து போராட்டம் செய்வோம் என்றும் எச்சரித்துள்ளார். (33)

# குருவளை அகதிமுகாம் மக்களுக்கு வீடுகள் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்வலிகாமம் வடக்கு குறு வளை அகதி முகாமில் வாழும் மக்களுக்காக வீடுகள் அமைக்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயக் கெடுபிடிகளால் மீளக்குடியமர முடியாத நிலையில் குருவளை அகதி முகாமில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து வரும் மக்களுக்காகவே இவ் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அந்த வகையில் குருவளை அகதிமுகாமில் ஐக்கியநாடுகளின் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராலயத்தால் 68 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் முரளிதரன் கூறினார்.

இந்த வீட்டமைப்புத்திட்டத்திற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (33)

# வர்த்தக சங்கம் அங்குரார்ப்பணம்

(பருத்தித்துறை)

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கரையோர வாழ் வர்த்தகர்கள் தமக்கென புதிய வர்த்தக சங்கமொன்றை நிறுவியுள்ளனர்.

பருத்தித்துறை முனை தொடக்கம் வல்வெட்டி தொண்டமனாறு வரையான கரையோர வர்த்தகர்களே இவ்வாறு வர்த்தகச் சங்கமொன்றை கடந்தவாரம் நிறுவியுள்ளனர். இதன் செயலாளராக க.சூரியகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார். (கா)

# வாழ்விடங்களுக்கு அருகில் கழிவுகள்; தொற்று நோய் பரவும் அபாயம்

(வடமராட்சி)

மக்களின் வாழ்விடங்களில் சில கழிவுப்பொருட்களைக் கொண்டு வந்து கொட்டுவதனால் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் பரவும் சாத்தியக் கூறுகளும் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலோலி, ஆனைவிழுந்தான் பகுதியிலேயே இவ்வாறு மாட்டெலும்பு, தோல்கள் மற்றும் நகரக் கழிவுப் பொருட்கள் போன்றன உழவு இயந்திர வண்டிகள் மூலம் கொண்டு வரப்பட்டு கொட்டப்படுகின்றன.

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இதன் அருகாமையிலேயே வாழ்வாதார இல்லிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டு மக்கள் செறிந்து வாழ்கின்றனர்.

இவ்வாறு மக்களின் வாழ்விடங்களுக்கருகாமையில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதனால் துர்நாற்றம் வீசுவதுடன் பரவலாக மழை பெய்து வருவதனால் மழைவெள்ளத்தோடு கலந்து மக்கள் வாழ்விடங்களுக்குள் கழிவுப்பொருட்கள் செல்கின்றன. எனவே இப்பகுதிகளில் கழிவு கொட்டும் நடவடிக்கையை நிறுத்தி மாற்று நடவடிக்கையினை மேற்கொள்ளும் வண்ணம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இப்பகுதிவாழ் மக்கள் தமது கோரிக்கை விடுத்துள்ளனர். (கா)

# மருத்துவமனைப் பிரதேசத்தில் மிதிவெடி; உடனடியாக அகற்றக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாதகல் மருத்துவமனையின் அயல்பிரதேசங்களில் சிறிலங்காப் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்ற உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலாளர் ரூபினி வரதலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி வைத்தியசாலையினை அண்டிய பிரதேசங்கள் பொதுமக்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலும் இப்பிரதேசங்களில் சிறிலங்காப் படையினரால் புதைத்துவைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

இதனால் இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுவதுடன் மாதகல் வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளமையினைச் சுட்டிக்காட்டி மேற்படி கோரிக்கையை விடுத்துள்ள வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் இப்பகுதியில் மிதிவெடி அகற்றலை ஆரம்பிக்கக்கோரி கடிதம் ஒன்றையும் யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டுக்குழுவினருக்கு அனுப்பி வைத்துள்ளார். (33)

# பாலம் உடைந்து வீழ்ந்ததால் போக்குவரத்தில் சிரமம்

(வடமராட்சி)

வடமராட்சி கரையோரத்தால் பயணத்தை மேற்கொள்ளும் போக்குவரத்து வீதியில் பாலம் உடைந்து வீழ்ந்துள்ளதால் அதனூடான போக்குவரத்துக்களில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

பருத்தித்துறை, தம்பசிட்டி,வத்தனை பகுதியிலுள்ள பாலமே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளது. கடந்த வாரம் இடிந்து வீழ்ந்த இப்பாலத்தினூடான ஒரு பக்க வழியினூடே இலகு ரக ஊர்திகள் மாத்திரமே போக்குவரத்தினை மேற்கொள்கின்றன.

இவ் வழியால் சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கை போக்குவரத்துச்சபை பயணிகள் பேருந்து போக்குவரத்துசேவை நிறுத்தப்பட்டதால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பருத்தித்துறையிலிருந்து கரையோரத்தினூடான பிரதான வீதியை சிறிலங்கா இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்கள் பாவனைக்கு தடைவிதித்துள்ளது.

இவ்வாறான நிலையில் தம்பசிட்டியூடான போக்குவரத்துப் பாலம் உடைந்துள்ள நிலையில் இதனூடாகப் பயணிகள் பேருந்து நெல்லியடி ஊடாக பல மைல்கள் சுற்றி திக்கத்தை சென்றடைந்து பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் வடமராட்சிக் கரையோரப்பிரதேசத்தில் வாழ்கின்ற யாழ்.நகர்பகுதியில் கடமை புரிகின்ற அரச அலுவலர்கள், உத்தியோகத்தர்கள், தனியார் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என தமது கருமங்களை பெரும் சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இப்பாலப் புனரமைப்புப்பற்றியோ அல்லது தற்காலிகப் போக்குவரத்திற்கு வசதி செய்து கொடுக்கும் முகமாகவோ சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எதுவும் முன்வரவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (கா)

# உவர்நீர்த் தடுப்புத்திட்டத்திற்காக 98 மில்லியன் ரூபா நிதி கோரப்பட்டுள்ளது

## -யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உவர் நீர் தடுப்புத்திட்டத்தினை மேற்கொள்வதற்கென 98 மில்லியன் ரூபா நிதி வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நன்னீர் மாசடைந்து உவர் நீரின் பரம்பல் அதிகரித்துள்ளது. இதனால் இங்கு பெரும் குடிநீர்ப்பிரச்சினைகள் தோன்றத் தொடங்கியுள்ளன.

இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு நன்னீர் நிலைகள் உவர் நீராவதைத் தடுப்பதற்கான திட்டங்களை அமுல் செய்ய வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது.

இந்தத்திட்டங்களை மேற்கொள்வதற்காக 98 மில்லியன் ரூபா தேவைப்படுவதால் இந்நிதியை சர்வதேச நிறுவனங்களிடம் தாம் கோரியிருப்பதாக அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார். (33)

# ஜீவனோபாயத்திட்டம் தொடர்பாக தேனகத்தில் கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நியாப் 2இல் தெரிவு செய்யப்பட்ட 25 மையக் கிராமங்களில் வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் ஒரு பிரிவான ஜீவனோபாய ஆதார செயற்திட்டம் எனும் கடன் திட்டத்தினை செயற்படுத்துபவர்களான உதவித் திட்டப் பணிப்பாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கால் நடை போதனாசிரியர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்,கிராம சேவையாளர்கள், சமூக வலுவூட்டலாளர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் நேற்று முன்தினம் மு.ப பத்து மணிக்கு தேனகம் ஒன்றுகூடல் மண்டபத்தில் மட்டகளப்பு மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ்நிலவு தலைமையில் நடைபெற்றது.

இதில் மையக் கிராமங்களில் மக்கள் நிலை தொடர்பாகவும், கிராமங்களின் தேவைகள் சரியான முறையில் இணங்காணப்பட்டு அதற்கேற்ற வகையில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மட்டு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானுவும், மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி ரமணனும் சிறப்புக் கருத்துரைகளை வழங்கினார்கள். தொடர்ந்து நியாப் உதவித் திட்டப் பணிப்பாளர் ரெட்ணராஜா நியாப் திட்டம் தொடர்பான விளக்க உரையினை வழங்கினார். மற்றும் கலந்து கொண்ட பிரிவுசார் உத்தியோகத்தர்களினால் கருத்துக்கள் வழங்கப்பட்டன. இதில் மட்டு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர் ஈழமாறன், நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் சினேகராஜ், கோட்ட மகளிர் பொறுப்பாளர்களான அமுதா, நிலாவிழி, தரகா, கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவரின் கல்வி நிலை வீழ்ச்சி

## -வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் நிலவிவரும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக இப்பகுதி மாணவர்களின் ஆங்கிலக் கல்விநிலைமை வீழ்ச்சி கண்டுள்ளதாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கூறியுள்ளார்.

யாழ்.வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்காக சுமார் 250 ஆங்கில பாட ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இவ்வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பபடாதுள்ளதனால் சில பாடசாலைகள் ஆங்கிலப்பாடத்திற்கான ஆசிரியர்கள் இன்றியே இயங்கி வருகின்றன.

இதனால் இப்பகுதி பாடசாலை மாணவர்களின் ஆங்கிலக்கல்வி அறிவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதுவும் மாணவர்களது கல்வி எதிர்காலத்தையும் வலுவாகப் பாதித்துள்ளது என்று வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மேலும் கூறினார். (33)

# நாட்டை 70, 80 களுக்கு பின்தள்ளும் 'மகிந்தவின் சிந்தனை' திசை மாறிச் செல்லும் அரசு!

இலங்கையில் ஐந்தாவது சனாதிபதித் தேர்தல் இம் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இன்னும் ஏழு நாட்கள் மட்டுமே உள்ளன. 13 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். இதில் பிரதமர் ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுமே, முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். தாங்கள் சனாதிபதியானால் இந்த நாட்டை பொருளாதாரத்தில் முன்னேற்றி தேசிய இனப்பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வைக்காண்போம் என இரு சனாதிபதிவேட்பாளர்களும் உறுதி கூறியுள்ளனர். இம்மாதம் 17 ஆம் திகதி இந்த நாட்டின் புதிய சனாதிபதி யார் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் பொழுது ஆசிய கண்ட நாடுகளில் ஜப்பான் பொருளாதாரத்தில் முன்நிலை வகித்தது மற்றும் சிங்கப்பூர், தாய்லாந்து தாய்வான், கொரியா போன்ற நாடுகள் இலங்கையை விட பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தன. ஆனால் குறுகிய காலத்தில் இந்த நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு நாடு வலுவடைந்தது இன்று தாய்லாந்து இலங்கையைவிட பத்து வீதம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது. சிங்கப்பூர் இலங்கையை விட பொருளாதாரத்தில் 20சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த நாடு பொருளா தாரத்தில் எப்படி முன்னேறியது என்பதை நாம் ஆராய வேண்டியுள்ளது. இதில் இரண்டு முக்கியமான விடயங்களை நாம் ஆராய்வோம். இதில் முதலாவது எமது நாட்டில் ஆரம்பம் தொடக்கம் இன்று வரை அரசியற்கட்சிகள் பிளவுபட்டு செயற்பட்டவண்ணம் இருந்ததே முதல்காரணமாகும்.இரண்டாவது ஒரு அரசியல் கட்சி எடுக்கும் தீர்மானத்தை மற்றக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் அதை அமுல்படுத்தாமல் அத் தீர்மானத்தை நிராகரிப்பதே ஆகும். இந்த நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் தமது அரசியல் இலாபம் கருதி இவைகள் எல்லாவற்றையும் குப்பைத் தொட்டியில் போட்டுள்ளன. மற்றும் நாட்டில் மக்களிடம் இன ஒற்றுமை கிடையாது. இந்நாட்டில் பெரும்பான்மை கட்சி சிறுபான்மை கட்சியின் கலாச்சாரம், மொழி, உரிமை, மதம் இவற்றுக்கு மதிப்பளிக்காமல் இவற்றை ஓரம் கட்டியபடியால் மக்களிடத்தில் விரக்தியும் வெறுப்பும் ஏற்பட்டது. இதனால் இந்த நாட்டில் பெரும் இரத்தக்களரி ஏற்பட்டு யுத்தம் ஆரம்பமாகியதால் ஒரு நாட்டின் இரண்டு இனங்கள் பிளவு பட்டபடியால் நாடு இன்று அதலபாதாளத்தில் விழுந்துள்ளது. பல சகாப்தங்களுக்கு பிறகு இந்த நாட்டில் புதிய மாற்றத்தை உண்டு பண்ணு வதற்காக இரண்டு பிரதான கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து அரசியல் நடத்துவதற்கு அத்திவாரம் இட்டுள்ளதை நாம் வரவேற்கிறோம். அதாவது நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வில் இரண்டு பெரிய கட்சிகளும் ஒரே கருத்துக்களைக் கொண்டுள்ளன. விசேடமாக பொருளாதாரப் பிரச்சினைகளில் இரண்டு கட்சிகளும் ஒரே கொள்கையை கடைப் பிடித்தன. மற்றும் துரித பொருளாதார முன்னேற்றம், திறந்த பொருளாதார கொள்கை, வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதுடன் அவர்களின் ஆலோசனைகளைப் பெறுவது மற்றும் உலக வங்கியின் சட்டங்களுக்கு அமைய நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது ஆகிய விடயங்களில் இருகட்சிகளும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன.

சர்வதேச நாடுகளுடனும் அமைப்புக்களுடனும் இணைந்து செயற்படும் பொழுது ஒரே கொள்கையை கடைப்பிடித்ததுடனும் மற்றும் நாட்டின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு எடுத்த தீர்மானம் இக்கட்சிகளின் பொது இணக்கப்பாடு இங்கே காணக்கூடியதாக இருந்தது.யுத்தம் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதென்பதை உணர்ந்த சந்திரிகா அரசு வெளிநாட்டு அரசின் அனுசரணையை ஏற்றதுடன் எதிர்க்கட்சியும் இதற்கு ஒத்துழைப்பையும் வழங்கியது. இனப்பிரச்சினை தீர்வுக்கு சமஷ்டி முறையே சிறந்த வழி என்பதை சனாதிபதிசந்திரிகா குமாரதுங்க



ரணில்



மகிந்த



சந்திரிகா

ஏற்றுக் கொண்டார். இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒத்துழைப்பைத் தந்தார். கடந்த வருடம் இந்த இரண்டு கட்சிகளின் இணக்கப்பாட்டை எம்மால் காணக் கூடியதாக இருந்தது. இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகம் தலையிட்டபடியால் சந்திரிகா அரசும்,ரணில் அரசும் புலிகளை உடனடியாக பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்தன மற்றும் சுனாமி கட்டமைப்பு சம்பந்தமாக ஏற்பட்ட எதிர்ப்பின் பொழுது எதிர்க்கட்சியும் அரசாங்கமும் மிகவும் நெருக்கமாக செயல்பட்டன.

இலங்கை சுதந்திரம் பெற்று 50 வருடங்கள் கடந்தும் இந்த நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடையவில்லை.காரணம் நாட்டில் யுத்தம் ஏற்பட்டு நாடு இருளடைந்துள்ளது.



எதிர்காலத்தில் இந்த இருளை நீக்க வேண்டுமானால் இரண்டு கட்சிகளும் இதய சுத்தியுடன் செயலில் இறங்க வேண்டும்.ஆனால் இப்பொழுது மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை காற்றில் பறக்க விட்டு சுதந்திரக் கட்சிக்கு எதிரானவர்களுடன்செயற்படத் தொடங்கி உள்ளார்.இது சந்திரிகா கட்டிக்காத்து வந்த கொள்கைக்கு முற்றும் எதிராகவேயுள்ளது. மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனை மீண்டும் இந்த நாடு 70ஆம்,80ஆம் ஆண்டுக்கு பின் தள்ளப்பட்டுள்ளது இந்த இனவாதம் தோல்வி அடையும் வரை இது தொடர்ந்து நீடிக்கு நாட்டின் அதிகாரத்தைப்பெற்று ஆட்சி நடத்துவதற்கும் சிறிலங்கா சுதந்திரககட்சியும்,ஐக்கிய தேசியக் கட்சியும் கடும் முயற்சியை மேற்கொண்டுவருகின்றன இரு கட்சிகளும் ஒன்றன் மீது ஒன்று சேற்றை வீசியவண்ணம் உள்ளன. ஆனால் கொள்கையளவில் இரு கட்சிகளும் ஒன்று என்பதை என்னால் கூறமுடியும். ஆனால் மகிந்த ராஜபக்ஷ தற்பொழுது திசைமாறி செல்கிறார் ஆனால் ரணில் விக்கிரமசிங்கவும், சந்திரிகா அம்மையாரும் வடகிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் மகிந்த ராஜபக்ஷ சிங்கள பேரினவாதிகளுடன் கைகோர்த்துள்ளபடியால் அவரால் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாது. இந்த இனவாதக் கட்சிகள் இருபது வருடங்களுக்கு முன் உள்ள கொள்கையை கடைபிடிக்கின்றபடியால் இதில் தற்பொழுது சிக்கியுள்ள அரசு மீண்டும் மேலெழும்புவது மிகக் கடினம். இதனால் பொருளாதாரம் சீர்குலைவதுடன் சர்வதேசஉதவிகளையும் பெறமுடியாத நிலைக்கு அரசு தள்ளப்படும் சமீபத்தில் மூன்று பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் விடுதலைபுலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டனர். ஆனால் இதுவரை அவர்களை அரசாங்கத்தால் விடுதலைசெய்யமுடியவில்லை ஒரு நாட்டில் இரு அரசாங்கங்கள் உள்ளன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். வடக்குகிழக்கிலும் நீதிமன்றங்களும் காவல்துறையும் இயங்குகின்றன அவர்களை மீறி இவர்களால் எதுவும் செய்யமுடியாது.

வடக்குகிழக்கில் உள்ள புலிகளின் நிர்வாகத்தில் ஒரு சுண்டு விரலையாவது ஒட்டும் சக்தி அரசாங்கத்திடம் கிடையாது. அவர்களது நீதி நிர்வாகம் மிக சீராக நடைபெறுகின்றது.தற்பொழுது ஜே.வி.பி என்ற சிறிய கட்சி இனவாதம் கலந்த ஐக்கிய இலங்கை என்ற கொள்கையைக் கடைப் பிடிக்கின்றது. ஆனால் மத்திய அரசின் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தி ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதேஇவர்களின் நோக்கமாக உள்ளது. ஆனால் இருபது வருடகால யுத்தத்தை முடிவுக்குகொண்டு வரவேண்டுமானால் சமஷ்டி ஆட்சிமுறையேஇதற்கு சிறந்த வழியாகும். ரணில் விக்கிரமசிங்கவும், சந்திரிகா அம்மையாரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சி முறையே சிறந்ததென ஏற்றுக் கொண்டுள்ளனர். அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். வேறு மார்க்கங்கள் கிடையாது என்பதே இவர்களின் கொள்கையாகும். விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை ஜே.வி.பி ஏற்றுக் கொள்ளவில்லை. இனவாதத்தை நாட்டில் ஏற்படுத்தி மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பதே இவர்களின் பிரதான நோக்கமாகும்.

விடுதலைப்புலிகளும் ரணில் அரசும் செய்து கொண்டபோர் நிறுத்த ஒப்பந்தத்தால் இந்த நாடு நன்மை பெற்றது. ஆனால்சில காரணங்களால் பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டன. ஆனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய அரசு பதவி ஏற்றும் இதுவரை பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் திணறிக்கொண்டு இருக்கின்றது இதனால் நாட்டின் பொருளாதாரம் சீர் குலைத்துள்ளதுடன் தமிழ்மக்கள் அனைவரும் மிக மனவிரக்தி அடைந்த நிலையிலுள்ளனர். சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மக்களுக்கான உதவிகளை அரசினால் மேற்கொள்ள முடியாமல் போயிற்று. அதனால் 2005 ஆம் ஆண்டு கிடைக்க இருந்த நாற்பதாயிரம் கோடிரூபா நிதி உதவியை அரசாங்கத் தினால் பெற முடியாமல் போயிற்று. இந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் சந்தர்ப்பத்தை நாடு இன்று இழந்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் நாட்டின்

லங்காதீப சிங்கள நாளிதழ்,
பேராசிரியர் **ஜெகான் பெரேரா**
மொழியாக்கம் அ.சக்திவேல்.

தலைவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். தங்களது சுயலாபத்திற்காக நாட்டை மீண்டும் ஒரு யுத்தத்திற்கு தள்ளவேண்டாம் ரணில் விக்கிரமசிங்க இம்முறை சனாதிபதியானால் சந்திரிகா அம்மையாரை இணைத்துக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லும் நிலைக்கு அவர் தள்ளப்படுவார். ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியானால் சிறிலங்கா சுதந்திர கட்சியை காப்பாற்றுவது ரணிலின் பொறுப்பில் உள்ளது. மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய அரசியல் காய்நகர்த்தல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை படுகுழியில் தள்ளுவதேயாகும். ஆனபடியால் ரணிலின் உதவி சந்திரிகாவுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நிச்சயம் தேவைப்படுகிறது. நல்ல இலங்கை நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு புதிய தலைமைத்துவம் ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டும் இதை மக்கள் உணர்ந்து கொண்டு நல்ல தலைவரை தேர்ந்தெடுக்கட்டும்.

# இலஞ்ச தடுப்பு ஆணைக்குழு மீது விசாரணை நடத்தக்கோருகிறார் மங்கள

**ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மீதான தமது முறைப்பாடு தொடர்பாக தம்மிடம் கருத்துக் கேட்காமல் முடிவு அறிவித்த இலஞ்ச தடுப்பு ஆணைக்குழு மீது விசாரணை நடத்த வேண்டும் என்று அமைச்சர் மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது ரணில் மீதான கணினி கொள்வனவு மோசடி தொடர்பாக முறைப்பாடு செய்த எம்மிடம் எதுவித கருத்தையும் ஆணைக்குழு பதிவு செய்யவில்லை. எமது முறைப்பாடு நிராகரிக்கப்பட்டது தொடர்பாக எதுவித உத்தியோகபூர்வ தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை.

இந்த மோசடி தொடர்பான அனைத்து ஆவணங்களும் எம்மிடம் உள்ளன. முறைப்பாடு செய்தவரின் கருத்தறியாமல் ஆணைக்குழு முடிவு மேற்கொள்வது என்பது முதல் முறையாக இப்போதுதான் நடைபெற்றுள்ளது. இது விடயத்தில் ஆணைக்குழு மீது விசாரணை நடத்த வேண்டும் என்றார் மங்கள சமரவீர, ஆனால் மங்கள சமரவீரவின் குற்றச்சாட்டை ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி அமீர் இஸ்மாயில் நிராகரித்துள்ளார்.

மங்களசமவீரவுக்கு உத்தியோக பூர்வமாக தகவல் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. அது அவருக்கு கிடைக்காது போனமைக்கு தபால் துறையின் தாமதம்காரணமாக இருக்கலாம். மங்கள சமரவீரவின் கருத்துக்களை நாம் நாளாந்தம் பதிவு செய்தோம். எம்மிடம் வரும் முறைப்பாடுகள் தொடர்பாக நாளாந்தம் நாம் விசாரணை மேற்கொள்கின்றோம். அதன்பின் தகுதியாவை மீதுவிசாரணை மேற்கொள்ளப்படும். தகுதியற்றவை நிராகரிக்கப்படும் என்றார் இஸ்மாயில்.

# வேட்பாளர்களது சொத்து விபரங்களை தெரிவிக்க தேர்தல் ஆணையம் மறுப்பு

## –ஊடகஅமைப்பு கண்டனம்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது சொத்து விபரங்களைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தெரிவிக்க மறுத்ததற்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சி வேட்பாளர்களான மகிந்தராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது சொத்து விபரங்கள் உள்ளிட்ட விபரங்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கவிடம் ராவய ஆசிரியர் கோரியிருந்தார்.

ஆனால் இந்த வேண்டுகோளை தேர்தல் ஆணையாளர் நிராகரித்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவானது இம்மாதம் 17 ஆம் திகதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது சொத்து விபரங்களை மக்கள் அறிவதைத் தடுக்கும் வகையிலான அவர்களது உரிமையை மீறுகிற செயற்பாடு ஆகும்.

இது தொடர்பான விபரங்களை அறிவதற்கான சட்டங்களையும் மீறுவதாக தேர்தல் ஆணையரின் முடிவு உள்ளது. தேர்தல் ஆணையரின் இந்த முடிவுக்கு ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் அமைப்பு என்கிற வகையில் நாம் வன்மையாகக் கண்டனம் தெரிவிக்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரணிலை சனாதிபதியாக்க பாதாள உலகக்குழுக்கள் முயற்சி

## –அமைச்சர் மங்களசமரவீர தெரிவிப்பு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரைகளுக்காக பாதாள உலகக் குழுக்கள், தரகர்கள், போதைப்பொருள் கடத்தல் காரர்கள் பெருந்தொகை நிதியை அளித்துள்ளனர். என்று அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

மங்களசமரவீர கூறியுள்ளதாவது; இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் ரணில் விக்கிரமசிங்க இதுவரை ரூ.684 மில்லியன் செலவிட்டுள்ளார். இந்தத் தொகையை ரணிலை அதிகாரத் துக்கு கொண்டுவரவிரும்புகிற பாதாள உலகக் குழுக்கள், தரகர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் அளித்துள்ளனர்.

அரசாங்க அமைச்சர்கள் தொடர்பில் அவதூறு விளம்பரங்களை வெளியிடும் இலத்திரனியல் ஊடகங்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும். இது தொடர்பில் லங்காதீப மற்றும் இரு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

தொலைக்காட்சி விவாதங்களில் ஜே.வி.பி உறுப்பினர்கள் பங்கேற்பதை சில ஊடகங்கள் தடை செய்துள்ளன. சனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தேர்வு செய்யப்பட்டால் தமது சட்டவிரோத செயற்பாடுகளைத் தொடர்வதற்காகவே அந்த நிறுவனங்கள் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

அரசாங்கத்தால் அளிக்கப்படும் உரிமங்கள் மூலமாக ரணில் விக்கிரமசிங்கவை சனாதிபதியாக்க அந்த நிறுவனங்கள் முயற்சிப்பதை நாம் அனுமதிக்க முடியாது என்றார் மங்களசமரவீர.

மங்கள சமரவீரவின்இந்தக்குற்றச்சாட்டுகளை சுவர்ணவாஹினி தொலைக்காட்சி மேலாண்மை இயக்குநர் ஜீவிகஎதிரிசிங்க நிராகரித்துள்ளார்.

# ஐ.ஒன்றிய கண்காணிப்பாளர் திருமலையில் ஆய்வு

திருகோணமலையில் சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் தொடர்பான பணிகளை ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர் ஜோன்குஸ்னாகன் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

திருமலை தேர்தல் அலுவலர்களுடன் இரு பிரதான சிறிலங்கா கட்சிகளின் வேட்பாளர்களது பிரதிநிதிகளுடனும் அவர் ஆலோசனை நடத்தினார்.

அதன்பின்னர் ஊடகவியலாளர்களை குஸ்னாகன் சந்தித்தார். உதவி அரசஅதிபர் ஜி.அமரதுங்க, துணைத் தேர்தல் ஆணையர் பண்டாரமாப்ப, சுதந்திரக் கட்சியின் திருமலை ஒருங்கிணைப்பாளர் நிமல் காமினி, ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஆரியவதி கலப்பதி ஆகியோரைதாம் சந்தித்ததாக குஸ்னாகன் கூறினார்.

மேலும் நான்கு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர் விரைவில் திருமலைக்கு வருவார்கள் என்றும் அவர் கூறினார். எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று யாழில் தேர்தல் ஏற்பாடுகளை தாம் பார்வையிட உள்ளதாகவும் குஸ்னாகன் கூறினார்.

திருமலையில் புலிகளின் பிரதேச வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான கொத்தணி வாக்குச்சாவடியை இராணுவ முகாமுக்குள் அமைத்துள்ளதாககூறப்படுவதை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட உதவித்தேர்தல் ஆணையாளர் பண்டாரமாப்ப தெரிவித்தார்.

# வடக்கு–கிழக்கில் யுத்தஅச்சத்தில் நடுங்கிய சிறிலங்கா இராணுவம்!

வடக்கு-கிழக்கில் சிறிலங்கா இராணுவம் மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலை மேற் கொள்ளப் போவதாக வெளியான தகவல்களால் படையினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாரிய அச்சத்தில் இருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தகவல் சேவையை இடைமறித்து கேட்ட போது அடுத்த சிலமணி நேரங்களில் பாரிய தாக்குதல் நடைபெறக்கூடும் என்பதால் உசார் நிலையில் இருக்குமாறு நேற்று முன்தினம் காலை படையினருக்குப்புலனாய்வுப் பிரிவு தகவல் அனுப்பியது.

இதையடுத்து அனைத்து சிறிலங்கா படைகளும் திடீரென உசார்படுத்தப்பட்டன. தாக்குதல் எந்தத் திசையிலிருந்து வரும் என்பது குறித்தோ எங்குதொடங்கப் போகிறது என்பது குறித்தோ அறியாதிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் தங்களது சுற்றுக்காவல்களை தீவிரப்படுத்தினர். படையினருக்கான கட்டுப்பாடுகளை அதிகரித்தனர்.

வடக்கு- கிழக்கிலுள்ள இராணுவ முக்கிய நிலைகளைச் சுற்றிப்பாரிய அளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். கடற்படையினரும் தாக்குதலை எதிர்கொள்வதற்கான உசார் நிலையில் இருந்துள்ளனர்.

ஆனால் சிறிலங்கா புலனாய்வுத் துறையின் தகவலின்படி எதுவித தாக்குதலும் நடைபெறாததால் தங்களது நடுக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து மாலையில் சிறிது நிம்மதியடைந்த நிலையில் படையினர் இருந்தனர் என்று படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழ்மக்கள் மீது அடக்குமுறையைத் தடுக்கத்தவறின் ஒப்பந்தம் அரசால்மீறப்பட்டு மீண்டும் யுத்தம் வெடிக்கும்

## –அரசை கடுமையாக எச்சரிக்கிறது திருமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை

திருகோணமலையில்சிறிலங்கா இராணுவத்தின் அத்து மீறியஅட்டூழியங்களை அரசாங்கம் மௌனமாக அனுமதித்திருப்பதானது சமாதானத்தை மிகவிரைவில் இல்லா தொழிக்கும். இவ்வாறு திருகோண மலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் அதன் தலைவர்வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவசரகால சட்டத்தை பிறப்பித்து அதன் மூலம்சிறிலங்கா படையினரை தாம் விரும்பியவாறு செயற்பட அரசாங்கம் அனுமதித் துள்ளது. கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அக்கிரமங்கள் கணக்கிலடங்காது. தமிழ் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு சர்வசாதாரணமாக்கப் பட்டுள்ளது. ஆட்களைக் கடத்துதல், காணாமல் போதல் சிறிலங்கா அரச சட்டத்தினால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது போல் தோன்றுகின்றது. சமாதான உடன்படிக்கை என்பது தனியே தென்னிலங்கை பெரும்பான்மை இனம் நிம்மதியாக வாழ்வதற்கு மட்டுமே உருவாக்கப் பட்டுள்ளதா? எனக்கேள்வி கேட்க விரும்புகின்றோம்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தான் தமிழ் மக்களை 1977ஆம் ஆண்டு முதல் 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளீர்கள். இந்த விடயத்தில தென்னிலங்கையின் பேரினவாத அரசுகள் இரண்டும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நாம் அறிவோம்.

இன்று சமாதான உடன்படிக்கை அமுலில் உள்ளபோது வடக்கு கிழக்கில் என்ன நடக்கின்றது? இராணுவம் கொண்டுவந்து குவிக்கப் பட்டு மக்களின் அன்றாட வாழ்வு முடக் கப்பட்டுள்ளது. சோதனைச் சாவடிகள் மனம்போன போக்கில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கு எதிரான ஆயுத வன்முறைகளும் பலாத்கார நடவடிக்கைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இராணுவம் தமது சக இராணுவச் சிப்பாயைக் காப்பாற்றுவதற்காக சட்டத்தை தனது கையில் எடுத்துள்ளது. ஓமந்தையில் இராணுவம் தனக்கு விரும்பியவாறு தனது நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. யாழ்ப்பாணத்தில் இராணுவம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 15பேர் படுகாயமடைந்து ஒருவர் உயிரிழந்தும் உள்ளார். சிறிலங்கா அரசும் அரச ஊடகங்களும் உண்மைக்கு மாறான செய்திகளை நாளுக்கு நாள் வெளியிடுகின்றன. கிழக்கில் தமிழ் ஆயுதக் குழுக்களின் பெயரால் சிறிலங்கா இராணுவம் தமிழீழவிடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துகிறது.

இவை யாவற்றையும் செய்து கொண்டு சமாதானத்தைப் பற்றி சிறிலங்கா அரசாங்கம் சர்வதேசத்திற்கு பொய்யான பிரச்சாரங்களைச் செய்கிறது. சிறிலங்கா அரசின் இச்செயற்பாட்டை தமிழ்மக்களாகிய நாங்கள்தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அனைத்து அடக்கு முறைகளையும் மனிதஉரிமை மீறல்களையும் தடுக்க வேண்டும் இன்றேல் நிச்சயமாக சமாதான ஒப்பந்தம் உங்களாலேயே மீறப்பட்டு மீண்டும் யுத்தம் வெடிக்கும் சூழ்நிலை உருவாகும் என எச்சரிக்கின்றோம். தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தை உங்களால் ஏமாற்ற முடியாது என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்டி சனாதிபதி மாளிகையிலிருந்து சனாதிபதி சந்திரிகா பிரியாவிடை

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற வுள்ள சந்திரிகா குமாரதுங்க கண்டியிலுள்ள சனாதிபதி மாளிகையில் மூன்று தினங்கள் தங்கியிருந்து அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கியுள்ளதுடன் 11 வருடங்கள் தனக்காகப் பணியாற்றி யமைக்காக நன்றியும் தெரிவித்துள்ளார்

தான் மீண்டும் கண்டிமாளிகைக்கு வரப்போவதில்லை என்றுதெரிவித்திருக்கும் சந்திரிகா குமாரதுங்க கண்டி மாளிகைக்கு வந்த சந்தர்ப்பங்களில் தனக்காக பணியாற்றி யமைக்காக அவர்களுக்கு நன்றி கூறினார்.

பேராதனையில் அமைக்கப்படும் சிறிமாவோ பண்டார நாயக்க சிறுவர் வைத்தியசாலையைத் திறந்துவைப்பதற் காக கண்டிக்குச் சென்ற சந்திரிகா மூன்று தினங்கள் அங்கு தங்கியிருந்தார்.

# இரு தமிழ் இளைஞர்கள் பசறை நகரில் கைது!

## –சந்தேகத்திற்கிடமாக நடமாடினராம்

(கொழும்பு)

பசறை மடுல்சீமைப் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்களிடம் சிறிலங்காப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டிகாதென்ன பிரதேசத்தில் தற்காலிகமாக தாம் தங்கியிருப்பதாகவும் தங்களின் சொந்த இடம் கிளிநொச்சி மற்றும், வவுனியா என்றும் இரு இளைஞர்களும் தெரிவித்துள்ளனர்.

# தேர்தலுக்கு முன்னரான வன்முறைகள் குறைவு!

## "பவ்ரல்" தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த கால தேர்தல்களோடு ஒப்பிடுகையில் இம்முறை சனாதிபதித் தேர்தலுக்கும் முன்னரான வன்முறைகள் மிகவும் குறைந்திருப்பதாகச் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பவ்ரல்) தலைவர் கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்துள்ளார்.

இதுவரை வேட்பு மனுத்தாக்கல் செய்த ஒக்ரோபர் 31 ஆம் திகதியிலிருந்து ஆக 64 சிறுசம்பவங்களே இடம் பெற்றிருக்கின்றன. 2001 தேர்தலில் 1000 சம்பவங்களும், 2004 தேர்தலில் 177 சம்பவங்களும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. வன்முறைகள் குறைந்தமைக்கு, அரசியல் கட்சிப் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தப்படும் விதிகள், பொலிசார் பேதமில்லாமல் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகளை ஏலவே தேர்தல் ஆணையாளர் அழுத்தி அறிவுறுத்தியிருந்தமையும் காரணமெனக் கூறப்படுகிறது.

# முதலமைச்சர் தலைமையில் ஆயுதக் குழு!

(கொழும்பு)

இருபத்திமூன்று பேர் அடங்கிய ரி-56 ரக துப்பாக்கிகளுடன் பொலிஸ் உடைக்கு சமமான உடைகள் அணிந் தகுழு ஒன்று வடமத்தியமாகாண முதல்அமைச்சரின் தலைமையில் இயங்கிவருகிறதென ஐக்கிய தேசியக்கட்சியின் அநுராதபுரமாவட்ட அமைப்பாளர் டாக்டர் ராஜா ஜோன் புள்ளே அநுராதபுர மாவட்ட தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள் ளார். இவர்களினால் அநுராதபுர மாவட்ட வாக்காளர்களுக்கு பெரும் சிரமங்களை உண்டுபண்ணும் என அவர் சுட்டிக்காட்டியதுடன் தேர் தலை குழப்புவதற்கு இக்கும்பலை முதல் அமைச்சர் பயன்படுத்து வதாக கூறியுள்ளார்

# மகிந்த சனாதிபதியானால் ஜே.வி.பி. ஆயுதம் தூக்கும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(பெலியத்த)

மகிந்தராஜபக்ஷ சனாதிபதியானால் ஜே.வி.பி.மீண்டும் ஆயுதம் தூக்கும் நிலை ஏற்படும் என பெலியத்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டமொன்றில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மகிந்தவின் சிந்தனைகள் ஒருபோதுமே நடைமுறைப்படுத்தப்பட முடியாதவை. அதனை நடைமுறைப்படுத்தாது மகிந்த ராஜபக்ஷ தட்டிக்கழித்தால் ஜே.வி.பி.மீண்டும். ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும்.

இந்திய இராணுவத்துக்கு எதிராக ஜே.வி.பி. ஆயுதக்கிளர்ச்சி நடத்தியது. அதனை வெளியேற்றமுயன்றது. ஆனால் இந்திய இராணுவம் இன்று இலங்கையில் இருந்திருப்பின் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் இப்பொழுது உள்ள இனப்பிரச்சினைக்கு தீவு ஏற்பட்டிருக்கும் என அவர் மேலும் கூறினார்.

# நேரடி விவாதத்துக்கான விதிமுறைகள் மகிந்தவுக்கு ரணில் விக்கிரமசிங்க கடிதம்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் தொடர்பான நேரடி விவாதத்திற்கான விதிமுறைகளைச் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்க கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல்தொடர்பாக என்னுடன் விவாதமொன் றிற்கு வருமாறு நான் உங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். எனது அழைப்பினை ஏற்றுக் கொள்வதற்கு நீங்கள் தயாராக இருப்பதாக கடந்த ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற கூட்டமொன்றின்போது நீங்கள் தெரிவித் ததாக செய்தி ஊடகங்களின் மூலம் அறியக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமே.

தேர்தல் விதிகளுக்கு அமைய இவ்வாறான ஒரு விவாதத்தினை எதிர்வரும் 14 ஆம் திக திக்கு முன்னதாக நடத்த வேண்டும். ஆகவே இதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள் வதற்கு இன்னும் எஞ்சியிருப்பது மிகவும் குறைந்த அளவிலான காலமே.

அதனைக் கருத்திற்கொண்டு விவாதம் தொடர் பான விதிமுறைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தீர்மானம் செய் வதற்காக உங்கள் பிரதிநிதி ஒருவரை காலம் தாழ்த்தாமல் பெயர் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன். இந்த விடயம் தொடர்பாக என்னுடைய பிரதிநிதியாக நியமிக் கப்பட்டிருப்பவர் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட ஆவார். இவரை 0777 486799 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் தொடர்புகொள்ள முடியும்.

விவாதத்திற்கானவிதிமுறைகளாக நாம் பரிந்துரைப்பது;

ஆறு இடைவேளைகளைக் கொண்ட இரண்டுமணி நேர விவாதம்.

கொழும்பில் பொதுமக்கள் முன்னிலையில் நடத்தப்படுதலும் நேரடி தொலைக்காட்சி ஒளி பரப்பு செய்யப்படுதலும் என்று அதில் ரணில் தெரிவித்துள்ளார். விவாத வடிவம் தொடர்பான ஆறு பரிந்துரைகளையும் ரணில் விக்கிரமசிங்க தனது இந்தக் கடிதத்தில் மகிந்தவுக்கு தெரிவித்துள்ளார்.

# வடக்குக் கிழக்கு சிங்கள அமைப்பு பாதுகாப்பு வழங்கக் கோருகிறது

(கொழும்பு)

தமது அமைப்பின் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பு திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையில் தற்போது நிலவும் சூழ் நிலையில் உறுப்பினர்களின் உயிருக்கு அச் சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் அந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 27ஆம் திகதி இனந் தெரியாதோரால் வடக்கு கிழக்கு சிங்கள அமைப் பின் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இந்த நிலையில் அமைப்பின் உறுப்பினர் களுக்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் உள்ளதாகவும் அந்த அமைப்பு பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (32)


முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் aat கற்கை நெறிக்கான

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**தகைமைகள்:- (சா/த) பரீட்சையில் ஆறு சித்திகள்**
**அல்லது (உ/த) பரீட்சையில் இரு சித்திகள்**

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கும் முகாமைத்துவக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட தகைமையுடையோர்கள் தங்களது விண்ணப் பங்களை 25.11.2005இற்கு முன்னதாக முகாமைத்துவக்கல்லூரி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:-* விரிவுரைகள் யாவும் சனி,ஞாயிறு ஆகிய தினங்க ளில் நடைபெறும்.

*நிர்வாகம்,*
*முகாமைத்துவக் கல்லூரி,*
*கரடிப்போக்கு சந்தி,கிளிநொச்சி.*

(சி-13320)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,கரவெட்டி

## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2006

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி 29.11.2005 நண்பகல் 12 மணி வரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :30.11.2005 நண்பகல் 12.30 மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி.01.12.2005 முற்பகல் 10 மணி
04. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15 வீதம் சேர்த்து அறவிடப்படும்.
05. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக எமக்கு பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
07. மேலதிக விபரங்களைக் குறித்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக் கப்படும் கேள்விவைப் புப் பணம் | மீளளிக்கப் படாதகேள் விப் பத் திரப்பணம் |
|---|---|---|---|
| நெல்லியடி உப அலுவலகம் | | | |
| 01.நெல்லியடி மரக்கறிச் சந்தை | 1,100,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 02.நெல்லியடி மீன் சந்தை | 79,500.00 | 2,000.00 | 250.00 |
| 03.கோவிற்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 165,000.00 | 3,500.00 | 250.00 |
| 04.கொட்டடிச் சந்தை | 2,100.00 | 500.00 | 250.00 |
| 05.நெல்லியடி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 185,000.00 | 10,000.00 | 250.00 |
| 06.நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 46,750.00 | 500.00 | 250.00 |
| 07.நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 46,750.00 | 500.00 | 250.00 |
| 08.நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.3 | 46,750.00 | 500.00 | 250.00 |
| 09.நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 484,500.00 | 3,000.00 | 250.00 |
| 10.கோவிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 135,300.00 | 3,000.00 | 250.00 |
| 11.கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 11,100.00 | 500.00 | 250.00 |
| 12.கொட்டடிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 37,500.00 | 500.00 | 250.00 |
| 13.நெல்லியடி பழையசந்தை | 55,100.00 | 3,000.00 | 250.00 |
| உடுப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 363,500.00 | 5,000.00 | 250.00 |
| 15.அந்திரான் சந்தை | 150,000.00 | 500.00 | 250.00 |
| 16.நவிண்டில் சந்தை | 4,500.00 | 500.00 | 250.00 |
| 17.உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 332,000.00 | 2,000.00 | 250.00 |
| 18.உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 5,700.00 | 500.00 | 250.00 |
| 19.அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 170,000.00 | 3,000.00 | 250.00 |
| 20.உடுப்பிட்டிச்சந்தை துவிச்சக்கர வண்டிப்பாது நிலையம். | 30,300.00 | 500.00 | 250.00 |
| கட்டைவேலி உப அலுவலகம் | | | |
| 21.துன்னாலை வடக்கு சந்தை | 500.00 | 500.00 | 250.00 |
| 22.துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 35,000.00 | 500.00 | 250.00 |
| 23.அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக்கடை | 20,100.00 | 500.00 | 250.00 |

**திரு.சி.வே. குலநாயகம்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

(சி.13266)

# எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிப்பேன்; ஆதரவாளர்கள் கூட்டத்தில் நட்வர்சிங் அறிவிப்பு



(புதுடில்லி)

விசாரணைக் குழு அமைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. நான் கோழை அல்ல. பாராளுமன்றத்தில் எல்லா கேள்விகளுக்கும் பதில் அளிப்பேன் என்று ஆதரவாளர்கள் கூட்டத்தில் இந்திய முன்னாள்வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் கூறியுள்ளார்.

ஈராக் நாட்டுக்கு உணவுக்கு எண்ணை திட்டத்தை நிறைவேற்றிய போது மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த நட்வர்சிங் ஆதாயம் பெற்றதாக ஐ.நா.சபைக்கு வோல்கர் குழுஅறிக்கை கொடுத்திருக்கிறது. இதைத்தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நட்வர் சிங்கிடம் இருந்த வெளியுறவுத் துறை அவரிடம் இருந்து பறிக்கப்பட்டது.தற்போது அவர் இலாகா இல்லாத மந்திரியாக இருக்கிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவரது வீட்டுக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து ஏராளமான ஆதரவாளர்கள் பஸ்களில் வந்தனர். அவர்கள் மத்தியில் நட்வர்சிங் பேசியதாவது:-

நான் 20ஆண்டுகாலமாக அரசியலில் இருக்கிறேன் என்மீது விசாரணைக் குழு அமைக்கப்பட்டு இருப்பதை வரவேற்கிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக நானோ, காங்கிரஸ் கட்சியோ பயப்படவில்லை நானே தான் இந்த விசாரணைக் குழுவை அமைக்கக் கோரினேன். அதை ஏற்றுக் கொண்டேன் நான் தற்போதும் மந்திரியாகத்தான் இருக்கிறேன். காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

# ஈராக் எண்ணெய் திட்ட ஊழல் புகாருக்கு உறுதியான ஆதாரம் இல்லை

*மன்மோகன்சிங்*



(புதுடில்லி)

ஈராக் எண்ணெய் திட்டஊழல் புகாருக்கு உறுதியான ஆதாரம் இல்லை என்று இந்திய பிரதமர் மன்மோகன்சிங் கூறினார்.

பீகார் தேர்தல் பிரச்சாரத்துக்கு சென்ற பிரத்மர் மன்மோகன்சிங், பாட்னாவில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

ஈராக் எண்ணெய் திட்ட ஊழல் புகாருக்கு உறுதியான ஆதாரம் கிடையாது இது பற்றிய உண்மையைக் கண்டறிய தனிக்குழுவும், விசாரணைகுழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் உண்மையான நிலை வெளிப்படும்.

அணுவாயுதங்கள் பரவக்கூடாது என்பதற்காகவே, ஐ.நா.சபையில் இந்தியா வாக்களித்தது. அமெரிக்காவின் கட்டாயத்துக்குட்பட்டு வாக்களிக்க வில்லை என்று மன்மோகன் சிங் கூறினார்.


# CARE International-Srilanka

Post Tsunami Relief and Development Project (p-TRDP) Phase III. Area office, kilinochchi

## VACANCY NOTICE

Care International-Sri lanka is now looking to fill the following positions to assist the development and livelihood activities of the people affected by Tsunami.

Administration Assistant-03 positions: Kilinochchi (paranthan)/vaddamarachchi- East (Masar)/ Mullaitivu (Thanniyothu).

**Job Summary**

The Administrative Assistant is responsible for different types of administrative supports to the Area/Field office. Responsible for proper maintenance of personnel files, logistic support, filing system, service contracts, vehicle operations, as well as repair and maintenance works of the Area/ Field office.S/he is also responsible to look after the security and cleanliness of the Area/ Field office.

**Qualifications:**

CGE A/L with at least 2 years experience in similar functions.

finance Assistant-02 positions: kilinochchi (paranthan)

**Jop Summary:**

The Finance Assistant will be responsible for assisting the Finance officer in all maters relating to Area/ Field office finances and books of accounts. This will include checking all financial documents and receipts, preparing Salary Sheets for the Casual staffs of the Area/Field office, maintaining pettycash, carrying out banking functions and making timely payments as per approval of the Team Leader-Program support/Project Director. S/he will also be responsible for filing all correspondences relating to Area/Field office finances and maintaining the audit and financial records. S/he will also be responsible for facilition of internal and external audits.

**Qualifications:**

The qualifications required for this position is minimum intermediate level of CIMA/Chartered Accounting or Diploma in Accounting with at least 2 years experience in similar job/position.

please send your CV to reach us on or before 19 th November 2005.

**Administrative officer,**
**CARE international-Sri lanka,**
**Kandy Road,**
**kilinochchi,**
**T.P 228 5093, Fax 228 5135, E-mail-knochi@ care. lk**

சி.13322


# வடநாட்டு வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டார்

வடநாட்டு வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வடநாட்டில் மத்திய பிரதேசம் மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில் கொலை, கொள்ளை, கடத்தல், கற்பழிப்பு போன்ற கொடூரச் செயல்கள் செய்துவந்தவர் நிர்பாய் குஜ்ஜார் என்ற வடநாட்டு வீரப்பன். இவர் மீது 200 இற்கும் மேற்பட்ட



வழக்குகள் உள்ளன. அவற்றில் 50 இற்கும் மேற்பட்ட வழக்குகள் கடத்தல் வழக்குகள் ஆகும்.


நிர்பாய் குஜ்ஜாரை உயிருடனோ, பிணமாகவோ பொலிசில் ஒப்படைப்பவர்களுக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பரிசு அளிக்கப்படும் என்று பொலிஸ் அறிவித்திருந்தது. அவரைப்பிடிக்க மத்தியப் பிரதேச அரசு ஒரு சிறப்பு அதிரடிப்படையையும் அமைத்தி ருந்தது.

நிர்பாய் குஜ்ஜார் சம்பல் பள்ளத்தாக்கை ஒட்டிய சித்தாபூர் என்ற கிராமத்தில் பதுங்கி இருப்பதாக அதிரடிப்படை பொலிசாருக்கு இரகசிய தகவல்கிடைத்தது. இதையடுத்து அதிரடிப்படை அங்கு விரைந்தது. அவர் பதுங்கி இருந்த இடத்தை அதிரடிப்படை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியது. இருதரப்பிலும் நடந்த சண்டைக்குப் பின்னர் அவரை அதிரடிப்படையினர் சுட்டுக்கொன்றனர்.

# தமிழ்நாட்டில் தொடர்மழை; மூன்று இலட்சம் மக்கள் வெள்ளத்தில்

(சென்னை)

தமிழ்நாட்டில் அடைமழையின் காரணமாக மதுரவாயல் ஏரி உடைந்தது. இதனால் மதுரவாயல்,நெற்குன்றம், சக்திநகர், கிருஷ்ணாநகர், மூகாம்பிகை நகர், பொன்னியம்மன்நகர், ஜெயராமன் நகர், விஜயலட்சுமிநகர், சி.டி.நகர்,



ஆழ்வார் திருநகர், சரஸ்வதிநகர், பெரியார் நகர் ஆகிய இடங்களில் 50 ஆயிரம் வீடுகள் மழைவெள்ளத்தில் மிதக்கின்றன.

இந்த வீடுகளில் வசிக்கும் மூன்று இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு மக்கள் முடங்கி இருக்கின்றனர்.

கடலூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. அங்குள்ள ஏரி, குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்த மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சென்னை நகரில் தாழ்வான பகுதிகளில் தேங்கிய மழைநீர் இன்னும் வடியவில்லை.

தற்போது தோன்றியுள்ள மற்றொரு தாழமுக்கம் காரணமாக தமிழ்நாட்டில் தொடர்ந்து மழைபெய்யுமென வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது இதன்காரணமாக மழையினால் ஏற்படும் சேதங்கள் மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

# இந்திய அணி சிறிலங்கா அணியை 7 விக்கெட்டால் தோற்கடித்தது



நேற்று ராஜ்கோட்டில் நடைபெற்ற இலங்கை இந்திய அணிகளுக்கிடையிலான ஆறாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் பதில் தலைவர் விரேந்தர் சேவாக் இலங்கையணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி இந்திய பந்துவீச்சாளர்களின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது முன்னணி வீர்களான சங்கக்கார, அத்தப் பத்து, ஆனல்ட், வாஸ் ஆகியோர் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து சென்றனர்.



ஆரம்ப வீரர் உப்புள் தரங்க 28, தில்சான் 59, சந்தன 30,ஜெயசூரிய 19 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் ருத்திர பிரகாஷ்சிங் அபாரமாக பந்துவீசி 8.5 ஓவரில் 35 ஓட்டங்களைக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைப்பெற்றார்.முரளி கார்த்திக் இரண்டு விக்கெட்டையும் பதான், சிறிசாந் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இரு வீரர்கள் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தனர். இதனால் அவ்வணி 42.5 ஓவரில் 196 ஓட்டங்களில் சுருண்டது

பதிலுக்கு 197 ஓட்டம் என்ற வெற்றியிலக்கோடு களமிறங்கிய இந்திய அணி 34.5 ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை மட்டுமிழந்து 197 ஓட்டங் களைப் பெற்று வெற்றி பெற்றது. அவ்வணியின் யுவராஜ்சிங் சிறப்பாக ஆடி மூன்று சிக்ஸர்கள் ,ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 67பந்துகளில் 79 ஓட்டங்களைப் பெற்றார். அவருடன கைப்35 ஓட்டங்களைப்பெற்றார். .ஆரம்ப வீரர் கம்பீர் 28 ஓட்டங்களைப்பெற்றார். சேவாக் டெண்டுல்கர் முறையே 29, 19 என்ற எண்ணிக்கையைப் பெற்றனர். சிறிலங்காவின் விக்கெட்டுக்களை கைப்பற்றிய ஆர்.பி சிங் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# டேவன்போர்ட் முதலிடத்தில்!

பெண்கள் டென்னிஸ் உலக தரவரிசை பட்டியலில் தற்போது அமெரிக்க வீராங்கனை டேவன்போர்ட் முதலிடத்தில் இருக்கிறர். பெல்ஜியம் வீராங்கனை கிம்கிளிஸ்டர்ஸ் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

ஆனால் இந்த ஆண்டுக்கான பட்டியலில் கிம்கிளிஸ்டர்ஸ் தன் முதலிடத்தை பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு இதுவரை நடந்தபோட்டிகளை ஒப்பிட்டு பார்க்கும் போது கிம்கிளிஸ்டர்ஸ் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கிறார். டேவன் போர்ட்டை விட அதிக போட்டிகளிலும் வென்று இருக்கிறார்.

கிம்கிளிஸ்டர்ஸ் இந்த ஆண்டு இதுவரை ஒன்பது பட்டங்களை வென்று இருப்பதுடன் 66 போட்டிகளில் வென்றிருக்கிறார். எனவே அவர் முதலிடத்துக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# டோனியை மணக்க போட்டா போட்டி



அணியின் இளம் புயல் மகேந்திரசிங் டோனியை மணக்க பணக்கார வீட்டுப் பெண்கள் போட்டி போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்திய கிரிக்கெட் அணியின் இளம் புயலாக மகேந்திரசிங் டோனி உருவெடுத்து இருக்கிறார். இலங்கைக்கு எதிராக 183 ஓட்டம் குவித்த அவருடைய சிறப்பான ஆட்டம் டோனிக்கு பெரும் புகழைச் சம்பாதித்துத்தந்திருக்கிறது. டோனி ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர். அவருக்கு 25 வயது ஆகிறது. இன்னும் திருமணம் ஆகவில்லை. அவரை மணக்க பணக்கார வீட்டுப் பெண்கள் போட்டி போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இதுபற்றி டோனியின் தந்தை பான்சிங் நிருபர்களிடம் கூறியதாவது,

டோனி கிரிக்கெட்டில் இன்னும் நிறை பேரும், புகழும் சம்பாதிக்க வேண்டும் என்கிற விருப்பத்துடன் இருக்கிறார். ஆனாலும் பல பெண்களுடைய பெற்றோர் என்னை அணுகி டோனிக்குப்பெண் கொடுக்கிறோம். சீக்கிரம் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

டோனி கிரிக்கெட்டில் இன்னும் நிறைய சாதிக்க வேண்டும் என்கிற இலட்சியத்தோடு இருப்பதால் இப்போது திருமணம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். ஆனாலும் ஒரு காலகட்டத்தில் மகனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டியது பெற்றோருடைய கடமை. அதன்படி உலகக் கோப்பை போட்டி முடிந்த பிறகு டோனிக்குத் திருமணம் செய்துவைக்கவேண்டும் என்று நினைத்திருக்கிறோம் என இவ்வாறு அவர் கூறினார்.

## இந்திய கிரிக்கெட் அணி

# அனுசரணை ஒப்பந்தத்திற்கு 300 கோடி ரூபா கோர முடிவு!

அனுசரணை மூலம் இந்திய கிரிக்கெட் அணிக்கு ரூ.300 கோடி ஒப்பந்தம் செய்ய முன்னணி நிறுவனங்கள் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் பல விளையாட்டுக்களை ரசிகர்கள் கண்டு கொள்வதே இல்லை. எனவே பண உதவி செய்வதற்கு சரியான அனுசரணையாளர்கள் இல்லாமல் திண்டாடுகிறார்கள்.

ஆனால் கிரிக்கெட்டுக்கு அமோக ஆதரவு இருப்பதால் இந்த அணிகளை அனுசரணை செய்ய நான், நீ எனப் பல நிறுவனங்கள் போட்டி போடுகின்றன.

தற்போது இந்திய கிரிக்கெட் அணியை 'சகாரா' நிறுவனம் அனுசரணை செய்துள்ளது. இதற்காக மூன்று ஆண்டுகளுக்கு ரூ.100 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்தது. இந்த ஒப்பந்தம் வருகிற 30 ஆம் திகதியுடன் முடிகிறது.

எனவே புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த கிரிக்கெட் சபை முடிவுசெய்துள்ளது. சகாரா நிறுவனமே மீண்டும் அனுசரணை செய்வதற்கு தயாராக உள்ளது. ஆனால் கிரிக்கெட் சபை ஒப்பந்தத் தொகையை ரூ.200 கோடியிலிருந்து ரூ.300 கோடி வரை உயர்த்தத் திட்டமிட்டுள்ளது. புதிய ஒப்பந்தம் ஐந்து ஆண்டு காலத்துக்கு ஏற்படுத்தப்படவுள்ளது.

சகாரா நிறுவனம் இந்தத்தொகையை கொடுக்க முன்வந்தால் அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படலாம். வேறு சில நிறுவனங்களும் ஒப்பந்தத்துக்கு தயாராக உள்ளன. ஒரு செல்போன் நிறுவனம், உந்துருளி நிறுவனம் ஆகியவையும் சகாராவுடன் போட்டி போடுகின்றன.

ஆனாலும் சகாரா நிறுவனத்துக்குத் தான் நாங்கள் முன்னுரிமை கொடுப்போம் என்று கிரிக்கெட் வாரிய பொருளாளர் ஜோதி பாஜ்பாய் கூறினார்.

அனுசரணை செய்யும் நிறுவனத்திற்கு அதற்கான தகுதி இருக்கிறதா, என்பதை உறுதி செய்த பின்பே ஒப்பந்தம் செய்யப்படும். அந்த நிறுவனத்துக்கு குறைந்த பட்சம் ரூ.500 கோடி சொத்து இருக்க வேண்டும்.புகையிலை . மதுநிறுவனங்கள் அனுசரணைசெய்ய முடியாது.

# பயிற்சி ஆட்டத்தில் பாக். ஏ அணியிடம் இங்கிலாந்து அணி படு தோல்வி!

பாகிஸ்தான் 'ஏ'அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

மைக்கேல் வோன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையே மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொண்ட தொடர் நடக்கிறது. பாகிஸ்தான் -இங்கிலாந்து அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகிற 12ஆம் திகதி முல்தானில் தொடங்குகிறது.

இதற்கிடையில் லாகூரில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி, பாகிஸ்தான் 'ஏ' அணியை எதிர்த்து ஆடியது. இதன் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 126 ஓட்டங்களில் சுருண்டது. அதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்சில் ஆடிய பாகிஸ்தான் 'ஏ' அணி 138 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

12 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்சில் ஆடிய இங்கிலாந்து அணி 256 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அதிக பட்சமாக கொலிங்வுட் 61 ஓட்டமும், ஸ்டிராஸ் 56 ஓட்டங்களும், ஜிலெஸ் 49 ஓட்டங்களும் எடுத்தனர். பாகிஸ்தான் 'ஏ' தரப்பில் அதிகபட்சமாக மன்சூர் அம்ஜத் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

245 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்சில் ஆடிய பாகிஸ்தான் 'ஏ' அணி இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 31 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. இந்த நிலையில் மூன்றாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்று நடந்தது. தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட் இழப்புக்கு 246 ஓட்டங்கள் எடுத்து ஆறு விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது. அதிகபட்சமாக ஹசன் 71 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் சாகித் யுசுப் 57 ஓட்டங்களும் எடுத்தனர்.உலக சம்பியன் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை வென்ற இங்கிலாந்து அணிக்கு பாகிஸ்தான் பயணத்தின் தொடக்கத்திலேயே சறுக்கல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாக்.ஆரம்ப துடுப்பாட்ட வீரராக சொஹைப் மாலிக் களம் இறங்கலாம்

நாளை மறுதினம் முல்டானில் ஆரம்பமாகும் இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் சொஹைப் மாலிக்கையும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு வருடங்களாக அவர் துடுப்பாட்டத்தில் திறமையாக ஆடி வருவதால் அவரை ஆரம்ப வீரராக களமிறக்கலாம் என பாகிஸ்தான் அணியின் உபதலைவர் யுனுஸ் கான் பி.பி.சி யிடம் தெரிவித்துள்ளார்.

ஒன்பது டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள அவர் 449 ஓட்டங்களைப் பெற்று 37.41 என்ற சராசரியுடன் காணப்படுகிறார். அவர் பொதுவாக ஆறு அல்லது ஏழாவது துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்படுகிறார்.

எனினும் இவ்வாண்டு ஆரம்பத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய இவர் முதலாவது இரண்டாவது இன்னிங்ஸ்களில் முறையே 13,64 என்ற ஓட்ட எண்ணிக்கையையே பெற்றார். கடந்த 2000 ஆம் ஆண்டுக்குப் பின் பாகிஸ்தான் நல்ல ஆரம்ப இணைப்பாட்ட வீரர்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தைச் சந்தித்து வருகின்றது.

எனினும் 2004 ஆம் ஆண்டு பொப் வூல்மர் பயிற்சியாளராகப் பணியேற்ற பின் தௌபிக் ஓமர், இம்ரான் பர்கட், அப்ரிடி, மாலிக், யசிர் அமிட், கமரன் அக்மல் ஆகியோரை ஆரம்பவீரராக மாறிமாறி களமிறக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**சிந்தனைக்கு**



இன்றைய உலக ஒழுங்கை பலம்தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழதேசியத்தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 10.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## சுயரூபம்

பொறுத்துப்பொறுத்துப் பார்த்தார்கள் பொங்கிப் பிரவாகித்த இனவெறியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. போட்ட வேடத்தைக் களையாமல் இருக்க முடியவில்லை.இறுதியில் தமது சுயரூபத்தையும் தமது கடந்தகால நடவடிக்கைகள் குறித்த ஒப்புதல் வாக்கு மூலத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் அளித்துவிட்டனர்.

முன்னாள் ஐ.தே.கட்சி தலைவர்களில் ஒருவரான காமினி திசாநாயக்கவின் மகன் நவீன் திசாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சிக்காலத்தில் அமைதிப்பேச்சு வார்த்தை என்ற ரீதியில் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பகிரங்கப்படுத்திய இரு தினங்களுக்குள் ஐ.தே.கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான மிலிந்த மொறகொடவும் அவற்றை ஊர்ஜிதம் செய்யும் வகையில் பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டி அளித்துள்ளார்.

அப்பேட்டியில் நவீன் திசாநாயக்க போன்றே அமைதிப் பேச்சுவார்த்தைக் காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக அதாவது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக அரசியல், இராணுவ ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பட்டியல் இட்டுள்ளதோடு இவை ரணில் விக்கிரமசிங்கவின் சாதனை எனவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கும் ஆதரவாகச் செயற்படுவதாக எதிர்த்தரப்பினர் தம்மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதைப் பொறுத்துப்பொறுத்துப் பார்த்த ஐ.தே.கட்சியினர் அமைதிக்காலத்துத் தமது சாதனைகளைப் பட்டியலிடத் தொடங்கியுள்ளனர். அது மாத்திரமன்றி ஏனைய கட்சிகள் தம்மீது சுமத்தியது போன்று விடுதலைப் புலிகளுக்கும் மற்றைய சிங்களக் கட்சிகளுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு உண்டு என்பது போன்றும் பேசத் தலைப்பட்டுள்ளனர்.

இந்தவகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கூறிய கருத்தின் சிறு பகுதி சுட்டிக்காட்டத்தக்கது. இதில் அவர் விடுதலைப்புலிகளுக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு இருக்கிறது எனத் தெரிவித்ததோடு ஜே.வி.பி யின் தலைவர் இராணுவத்தைக் கலைத்து விடுமாறு கோருவதும் அதன் அடிப்படையிலேயே ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர்களின் பேச்சுக்கள் ஒரு வகையில் ஒப்புதல் வாக்கு மூலம் போன்றவையே. நாட்டை விடுதலைப் புலிகளுக்கு ஐ.தே.க காட்டிக்கொடுத்துவிட்டது, நாட்டைப் புலிகளிடம் பிரித்துக்கொடுக்க ரணில் தயாராகி விட்டார் என்று தொடர்ச்சியாக எதிர்க்கட்சியினர் சுமத்திய குற்றச்சாட்டுக்களைப் பொறுக்க முடியாமலே சமாதானத்தின் பெயரில் தாம் செய்த சாதனைகளைப் பட்டியல் இடத்தொடங்கியுள்ளனர்.

ஆனால், ஐக்கிய தேசியக்கட்சியின் இத்தகைய நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படாததாகவோ புரியக்கூடாததாகவோ இருந்ததில்லை. விடுதலைப்புலிகள் இயக்கமும், தமிழ்மக்களும் இதனை நன்கு புரிந்து கொண்டே இருந்தனர். அவசர அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்கக் கூடத் தயாராக இல்லாத கட்சியிடம் இருந்து எதனையும் எதிர்பார்க்க புலிகளோ, தமிழ் மக்களோ ஏமாளிகள் அல்ல.

சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் தயாரான போதும்; பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோதும் ஐக்கிய தேசியக் கட்சி ஆயுதப்படையினரைப் பலப்படுத்துவதிலும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சர்வதேச நாடுகளுடன் பாதுகாப்பு வலைப் பின்னல் ஒன்றை உருவாக்குவதிலுமே அக்கறை காட்டிவந்தது. அதுமட்டுமன்றி ஐ.தே.கட்சியின் கடந்த கால அரசியல் வரலாறும் தெரியாததொன்றல்ல.

ஆகையினால் விடுதலைப்புலிகளையும், தமிழ்மக்களையும் ஏமாற்றி விட்டதாக ஆனந்தமோ பெருமிதமோ கொள்வதற்கு எதுவுமே இல்லை. ஆனால் ஒன்று ஐக்கிய தேசியக்கட்சி அமைதி விரும்பிய அனைவரையும் ஏமாற்றியுள்ளது என்பதே பொருத்தப்பாடானதாகும். அது மட்டுமன்றித் தன்னைதானே ஐ.தே.கட்சி ஏமாற்றிக் கொண்டுள்ளது என்றும் கூறலாம்.

ஏனெனில் அமைதி முயற்சியின் தோல்வி என்பது தமிழ் மக்களுக்கோ அன்றி விடுதலைப்புலிகளுக்கோ கிடைத்த தோல்வி என ஐக்கிய தேசியக்கட்சியினரோ அன்றி வேறு யாராவதோ எண்ணுவார்களேயானால் அதில் அவர்கள் ஏமாற்றமே அடைவார்கள். ஏனெனில் அமைதி முயற்சியின் தோல்வியானது இலங்கையில் பெரும் நெருக்கடி ஒன்றிற்கு வித்திடுவதாகவே இருக்கும் ஆகையினால் இத்தோல்வியானது இலங்கை அரசினுடைய தோல்வியாகவே இருக்கும்.

சிலவேளை மிலிந்தமொறகொடவும், ஐக்கிய தேசியக்கட்சியினரும் தாம் ஏற்படுத்தியுள்ள சர்வதேச வலைப்பின்னலானது இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்குப் பெரும் துணையாக இருக்கும் எனக்கருதலாம். ஆனால் உலக வரலாற்றில் உரிமைக்காகப் போராடிய, போராடும் எந்தவொரு மக்கள் கூட்டமும் ஒடுக்குமுறையாளரின் அடக்கு முறைக்கு உட்பட்டு அமைதிகாத்ததாக வரலாறு இல்லை. இது தமிழருக்கும் பொருந்தும்.

# "ஹெல்பிங் அம்பாந்தோட்டை" விசாரணைகளில் மகிந்தவின் உரிமைகள் மீறப்படவில்லை

–சிறிலங்காவின் குற்றப்புலனாய்வுப் பிரிவு

(கொழும்பு)

ஹெல்பிங் அம்பாந்தோட்டை நிதி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதன் காரணமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அடிப்படை உரிமை மீறப்படவில்லை என சிறிலங்கா குற்றப்புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

குறித்த நிதி தொடர்பான விசாரணை காரணமாக தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

அது தொடர்பான மனுவில் அவர் இரண்டாவது பிரதிவாதியாக கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் லயனல் குணதிலக்கவை குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று நீதிமன்றத்தில் தமது விளக்கத்தை அளித்த லயனல் குணதிலக்க ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய சட்டமா அதிபரின் அனுமதியுடன் குறித்த விசாரணையை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

அவசர முகாமை சேவைப் பிரிவுக்கு வரவு வைக்கப்படும் முன்னர் 82 மில்லியன் ரூபா மற்றுமொரு வங்கியில் வைப்பு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (32)

# சனாதிபதித்தேர்தலை குழப்ப முயன்றால் சட்டப்படி உரிய பாடம் புகட்டுவோம்

– அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலை எவராவது குழப்ப முயன்றால் சட்டப்படி உரிய பாடம் புகட்டுவோம் என நேற்று முன்தினம் மாலை இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப்போவது தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவே. அத்துடன் பாராளுமன்றத்திலும் எமக்கே பெரும்பான்மையுள்ளது. ஆகையால் ஐக்கிய தேசியக் கட்சி தனியான இன்னுமொரு வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் கிட்டாது. நாம் 18ம் திகதிக்குப் பின் தனியான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்போம் என ஐ.தே.க. பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுவது அர்த்தமற்றது. நீதி நியாயமான சனாதிபதித் தேர்தலை நடத்த நாம் தேர்தல்ஆணையாளருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலைக் குழப்பப் பல திட்டங்களை தீட்டி வருவதாக எமக்குப் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன. இது குறித்து நாம் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம் என்றார்.

# ஐ.தே.க வின் பிரச்சாரக் கொடிகளை அகற்ற மறுத்த சிறிலங்கா பொலிஸ் அதிகாரி திடீர் இடமாற்றம்!

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளும் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நேற்று குருநாகலில் நடைபெறவிருந்த நிலையில் குருணாகல் பிரதேச பொலிஸ் உயரதிகாரிகள் இருவர் திடீர் என நேற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி குணதிலக்க சேவையில் இடைநிறுத்தப்பட்டு பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பேர்டி கொப்பலாவ இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார கூட்டம் நடைபெறவுள்ள இடத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்த கொடிகளை அகற்ற மறுத்தார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்ற போது கட்சியின் அலங்காரக் கொடிகள் அகற்றப்படவில்லை என கூறப்படுகிறது.

அதேவேளை குருநாகல் தலைமையக பொலிஸ் நிலையத்தின் இன்ஸ்பெக்டர் சமன் திசாநாயக்கவும் திடீரென பேர்டி கொப்பலாவவினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றங்கள் சட்ட விரோதமானது என தெரிவிக்கும் பிரதேச மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரிலேயே இவை இடம்பெற்றுள்ளதாக் தெரிவிக்கின்றனர். (32)

# மு.கா. ஆதரவாளருக்கு எதிராக அரச அதிகாரம் பிரயோகம்

– ரவூப் ஹக்கீம் முறைப்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதரவாளர்களுக்கு எதிராக அரசாங்க அதிகாரம் பயன்படுத்தப்படுவதாக அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் முறைப்பாடு செய்துள்ளார். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான தேர்தல் கண்காணிப்பாளர் ஜோன் குஸ்ணஹானைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய ரவூப் ஹக்கீம் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளருக்கு எதிராக அரசாங்க அதிகாரம் பயன்படுத்தப்படுவதாகவும், கிழக்கு மாகாணத்தில் சனாதிபதித் தேர்தல் வாக்களிப்பை குழப்புவதற்கு சில தீயசக்திகள் முயற்சிப்பதாகவும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க ஊடகங்களில் தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இது தேர்தல் சட்ட விதிமுறைகளுக்கு எதிரானதெனவும், முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூவ் ஹக்கீம், ஜோன் குஸ்ணஹானிடம் கூறியுள்ளார்.

பாரபட்சமற்ற முறையில் செயற்படுவதற்காக இதுவரை பொலிசார் முயன்றுவந்துள்ளதாகவும், எனினும், கிழக்கு மாகாணத்திலுள்ள சில பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பராபட்சமான முறையில் செயற்படுவதாகவும் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதித்தேர்தல் நடைமுறைகள் குறித்து தேர்தல் ஆணையாளர் இன்று ஆராய்வு

தெரிவத்தாட்சி அதிகாரிகள், உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர் இன்று தேர்தல்கள் ஆணையகத்திற்கு சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தலைமையில் சனாதிபதித் தேர்தலில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்படும் என தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது. இதேவேளை நேற்று வாக்குகள் எண்ணும் நடவடிக்கை தொடர்பாக அதிகாரிகளுக்கான கருத்தரங்கு ஒன்று தேர்தல் ஆணையகத்தில் இடம்பெற்றது. அத்துடன் நேற்றுமுன்தினம் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதில் வடகிழக்கில் அமைக்கப்படும் கொத்தணி வாக்குச் சாவடிகள் மற்றும் தேர்தல் தொடர்பாக ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. (32)

## மலையக..

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இது இடம் பெற்றிருக்கவில்லை. இதுதொடர்பாக மலையக அபிருத்தி அமைச்சர் தி.மு. ஜெயரட்ண நிதியமைச்சரிடம் சுட்டிக்காட்டினார்.அப்போது நிதியமைச்சர் சரத் அமுனுகம அதனைக் குறிப்பிடாது தவறவிட்டு விட்டதாகக் கூறியதாகவும் விரும்பிய தொகையைத் தெரிவித்தால் வரவு-செலவுத்திட்டத்தில் திருத்தமாகச் சேர்த்துக் கொள்ளலாம் என்று அவர்தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.(32)

## வாக்காளர்..

கப்பட்டு வருகின்றன.

இந்த அடிப்படையில் மீசாலைப்பகுதியில் வாக்காளர்களுக்கு விநியோகம் செய்வதற்காக தபாற்காரர்களால் எடுத்துச்செல்லப்பட்ட வாக்காளர் அட்டைகளே நேற்றைய தினம் இருவேறு இடங்களில் வைத்துப்பறிமுதல் செய்யப் பட்டுள்ளது. உந்துருளிகளில் வந்த இனம் தெரியாதோரே தபாற்காரர்களை மிரட்டிவிட்டு வாக்காளர் அட்டைகளைப் பறித்துச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ள தபாற்திணைக்களம் இந்தச்சம்பவத்தில் 259 வாக்காளர் அட்டைகள் பறித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் கூறினர் . (33)

## தேர்தல்...

அமைக்கப்படவேண்டும் என உத்தரவிட்டது.வாக்களிக்க வரும் மக்களுக்கு இரண்டு கட்டங்களாக போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.அத்துடன் வாக்காளர்களை அடையாளம் காண்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை குறித்த வாக்குச்சாவடிகளின் பொறுப்பதிகாரிக்கு உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.இந்த நிலையில் வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் சனவரி மாதம் 20 ஆம் திகதி மீண்டும் நடைபெறும் என உயர்நீதிமன்றம் அறிவித்தது. (32)

## தமிழீழ...

டத்தைச்சேர்ந்தவர்களுக்கான மீளளிப்பு நடவடிக்கையே நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்நடவடிக்கை தொடராக உதவி அரச அதிபர் பிரிவு வாரியாக நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக நேற்று நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவைச்சேர்ந்த தெரிவானவர்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டது.மீளளிப்பினை தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர் தமிழ்க்குமரன் மேற்கொண்டார்.இதில் மீட்புநிதிக்கடன் மீளளிப்பு நடவடிக்கை பொறுப்பாளர் வெற்றியரசன், வருவாய்த்துறைப்பொறுப்பாளர் மருதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.இந்த மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு முன்னர் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட ஒழுங்கில் நடைபெறும் என மீட்புநிதிக்கடன் மீளளிப்பு நடவடிக்கைப்பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்தார். (லோ,தீ)

## நவம்பர்...

பாதுகாத்தல்.

மர நடுகையை மேற்கொள்ளல், சகல மக்களிற்கும் சூழல் நடவடிக்கைகளையும், விழிப்புணர்வையும் வழங்குதல்.

நடவடிக்கைகள்:-

திண்மக் கழிவுகளை அகற்றுதல், பொலித்தீன், பிளாஸ்ரிக், அஸ்பெஸ்டஸ், பற்றறி, இரும்புக்கழிவுகள், போத்தல்கள் போன்ற சூழலுக்கு ஒவ்வாத கழிவுப் பொருட்களை அகற்றல்.

மாசடைந்த நீரைத் தேக்கி வைத்திருக்கும் பொருட்களை அகற்றுவதும், அவ்வாறான இடங்களை சுத்தம் செய்வதன் மூலம் தொற்று நோய்களை தடுத்தலும்

கழிவு வாய்க்கால்களை நேர்த்தியாக்குவதன் மூலம் கழிவு நீரினால் ஏற்படக் கூடிய நோய்களையும் அசௌகரியங்களையும் தடுத்தல், கழிவு சேகரிப்பான்களை பொருத்தமான இடங்களில் வைத்தல், கண்ணாடித் துண்டங்கள், தகரங்கள் போன்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதன் மூலம் அத்தகைய கழிவுகளின் பரவலான தேக்கத்தை தவிர்த்தல்.

சிரமதானம் செய்தல்:-

சம்பந்தப்பட்ட சகலரும் உட்பகுதிகளையும், சுற்றுப்புறப் பகுதிகளையும் அதனுடன் இணைந்த பகுதிகளையும் பாதையோரத்தை அண்டிய பகுதிகளில் காணப்படும் திண்மக் கழிவுகளை அகற்றி பற்றைகளை வெட்டித் தூய்மையாக்கல்.

பாதைகள், வாய்க்கால்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பொது மக்களைப் பயன்படுத்தி சிரமதானம் செய்தல்.

மரநடுகை:-

வீடுகள், வீதியோரங்கள்,பொது இடங்கள் சகல இடங்களிற்குமான மர நடுகையை மேற்கொள்ளல்.

ஏற்கனவே நடப்பட்டு பராமரிப்பின்றி இருக்கும் மரக்கன்றுகளை பராமரிப்பதுடன் தேவையான இடங்களில் மரங்களைப் பாதுகாக்கக் கூடிய ஒழுங்குகளைச் செய்தல் என்பவற்றை இச்சூழல் வாரத்தில் கடைப்பிடிக்குமாறு தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள், விவசாய வர்த்தக அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், சுகாதாரதிணைக்களங்கள், மக்கள் அனைவரையும் இச் சூழல் வாரத்தில் இணைந்து செயற்படுமாறு தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.

## உயர்தர..

கூறுவது இதுவே முதற்தடவையாகும்.

சிறிலங்கா பேரினவாத சக்திகள் திட்டமிட்ட முறையில் தமிழ் மாணவர்களுக்கு இழைத்து வந்த அநீதிகளையும்- கொடுமைகளையும் அமைப்பு ரீதியாக எந்தவொரு சக்திகளும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வர முன்வரவில்லை. இந் நிலையிலேயே தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்று திரண்டு (1500 மாணவர்கள்) நாளை வெள்ளிக்கிழமை. மாணவர்கள் எழுச்சி மாநாடு ஒன்றை நடாத்தவுள்ளோம்.

இம் மாநாட்டின் தொடக்கத்தில் ஆய்வுக் கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்ட ஆறு மாணவ பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்படும். அக்கட்டுரைகளின் தலைப்புகளாக;

"இன்றைய தமிழ் மாணவர்களது களநிலை", ''பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்", "தமிழ் பாடத்திட்டத்தில் மறைக்கப்படுபவையும் நீக்கப்படுபவையும்" ''இலங்கையின் கல்விக் கொள்கையில் உள்ள குறைபாடுகள்'', ''தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளும் மாணவர்களைப் பாதிக்கும் விதமும்", " சுனாமியும் தமிழ் மாணவர்களும்"

ஆகியதலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும்.

மாநாட்டின் இடைவேளை நேரம் " மாணவர் எழுச்சி மாநாட்டின்" நோக்கமும் கொள்கையும் குறித்த மிகப் பிரதானமான " பிரகடனம்" வெளியிடப்படும்.

இறுதி நிகழ்வாக ஒன்று திரண்ட 1500 மாணவர்களையும் ஒன்று திரட்டி ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்படும் அக்குழுக்கள் ஒவ்வொன்றிடமும் ஒவ்வொரு விதமான செயற்றிட்டங் கள் பகிர்ந்து கொடுக்கப்படும்.

இம் மாணவர் எழுச்சி மாநாட்டில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர், விரிவுரையாளர்கள் ,சர்வதேச தொண்டமைப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (37)

## ஆக்கிரமிப்பு..

நாங்கள் இதுவரை காலமும் எல்லா வடிவிலும் பேசிக்கதைத்து ஏமாந்த வரலாறுதான் தமிழீழத்தில் உள்ளது. சிறிலங்கா அரசாங்கம் நமக்கு எதுவுமே தரப்போவதில்லை என்பதுதான் இன்றும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

இன்று இலங்கைத் தீவில் இரு தலைவர்கள் -ஒன்று சந்திரிகா மற்றொன்று தலைவர். இலங்கைத் தீவில் இன்று இரு படைகள் ஒன்று தமிழீழ இராணுவம் மற்றது சிறிலங்காப் படை. சமாதான காலத்திலும் நாம் நேர்மையாகவும் நீதியாகவுமே அணுகி வருகின்றோம். ஆனால் இந்த மூன்றரை ஆண்டுகாலத்தில் 116 போராளிகள் வீரச்சாவைத் தழுவியதும், தமிழ் மக்கள் அநியாயமாகக்கொல்லப்பட்டதும்தான் தமிழீழத்துக்குக்கிடைத்திருக்கிறது.

சமாதானம் என்ற பெயரில் எங்களுடைய போராட்டத்தை சிதைக்கிற நடவடிக்கைகளும் தமது ஆக்கிரமிப்பை விரிவு செய்கிற நடவடிக்கைகளுமே சிறிலங்கா அரசால் செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

தமிழ் மக்களை பலவீனப் படுத்துவதுதான் தமது சமாதான நடவடிக்கைகளின் இலக்கு என்று சிறிலங்கா அரசுகள் தம்மைத் தாமே அம்பலப்படுத்தி நிற்கின்ற நிலையில் தமிழ் மக்கள் தாமே போராடி விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.

தலைவருக்குப் பக்கபலமாக இருக்கிற நீங்கள்தான். "பொறுத்தது போதும் பொங்கி எழு தலைவா" என்று பலமுறை தலைவருக்கு மனுக்கள் கொடுத்துள்ளீர்கள். உங்கள் கருத்துக்களை தலைவர் நிச்சயம் கவனத்தில் எடுத்துக்கொள்வார். தலைவர் எந்த நேரத்தில் போருக்கான அழைப்பாகிய அந்த மணியோசையை அடிக்கிறாரோ அப்போது நாம் அனைவரும் ஒருங்கிணைந்து தலைவரது கரத்தை இறுகப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இனிநாம் நடத்தப்போகின்ற யுத்தம் மாதக்கணக்கிலோ வருடக் கணக்கிலோ இருக்கக்கூடாது எந்த நேரத்திலும் எந்தச் சவாலையும் எதிர் கொள்ள தமிழீழக்கடற்படை தயாராக உள்ளது. திருகோணமலை துறைமுகமாக இருந்தாலும், காங்கேசன் துறையாக இருந்தாலும், மன்னார், பூநகரி கிளாலிநீரேரி கரையோரங்களாக இருந்தாலும் சரி எங்களது தமிழீழக் கடற்பரப்பில் எமது கடற்படைக்கு எவரும் வேலி போட முடியாது.

எந்தப் படை வந்தாலும் எதிர்கொள்வோம். எமது கடலில் எங்களது ஆட்சிதான் தமிழீழக்கடலில் எமது தலைவர் உருவாக்கிய கடற்படை தான் நிற்க வேண்டும். இன்றைக்கு பல துணைப்படையினர் பயிற்சி எடுத்துள்ளார்கள் என்றால் எமது பிரதேசத்தை நாம் அடித்தெடுக்க வேண்டும். அதற்கு விடுதலைப் புலிகளோடு பக்க பலமாக நிற்க வேண்டும் என்பதுதான்.

இதற்காகத் துணைப்படையினர் பயிற்சிகளை எடுத்துக்கொள்கிறார்கள். வடமராட்சி கிழக்கிலே இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பயிற்சிக்காக முண்டியடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களில் இதுவரை 600 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றார் விநாயகம்.

இந்நிகழ்வுக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ச. மரிய நாயகம் தலைமைவகித்தார்.

கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் பொதுச்சுடரை ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியை புலிகளின்குரல் வானொலிப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஏற்றினார்.

லெப்.கேணல் நாவரசனின் திருவுருவப்படத்துக்கு மன்னார். கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழன் ஈகச்சுடர் ஏற்றினார்.

நா.தமிழன்பன்,விநாயகம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். பயிற்சியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன.

## தீவகக்..

பில் கடல் நீரினுள் அமிழ்ந்திருந்து பிரஸ்தாப கடற்றொழிலாளி கடலட்டைபிடித்துக் கொண்டிருந்த சமயம் இவர் கடல் நீரினுள் அமிழ்ந்திருப்பதை அறியாத வேறு சில கடற்றொழிலாளர்கள் கடலினுள் டைனமற் வெடிகுண்டினை வீசி மீன்பிடிக்க முற்பட்டுள்ளனர்.

இவர் கடலினுள் அமிழ்ந்திருந்த சமயம் கடல் நீரினுள் டைனமற் வெடிக்கவைக்கப்பட்டதனால் ஏற்பட்ட நீரலை அதிர்வின் காரணமாகவே இக்கடற்றொழிலாளி உயிரிழந்துள்ளதாகப் பொலிசார் கூறினர்.

இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின்பின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (33,37)

## சாவு அறிவித்தல்



### கணபதி நவரட்ணம் (இராசு)

மானிப்பாய் ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் இல:-175, அரசடி வீதி, முதலாம் ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நவரட்ணம் நேற்று புதன்கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற கணபுதி நாகம்மாவின் மூத்த மகனும், மலரின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, பூவிலிங்கம், மகாலிங்கம் (ஜேர்மனி), சிவலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தெய்வேந்திரம், நல்லம்மா, பசுபதி, நேசமலர் ஆகியோரின் மைத்துனரும் ஜீவரட்ணம், விசுவரட்ணம், சிவமதி, சுகிந்திமதி,ரஞ்சிதமதி, ரஜிதமதி (முதலாம் வருட மாணவி கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), பிரேமரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மெலானி, விமலாதேவி, செல்வராசா (ஈழநாதம் மக்கள் தினசரி), ராஜ்குமார், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கெற்சிகா, நிலாவரசி, டென்சிகா, டெலக்சிகா, டெலக்சீன், துஸ்யந்தன், சாருஜா, ராகுலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல:- 175, அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
வே.செல்வராசா (மருமகன்).
(ஈழநாதம் மக்கள் நாளிதழ்)

(சி.13268)

## வவுனியாவில்...

வேளை சோதனை என்ற பெயரில் தமிழ் பெண்களுடன் கீழ்த்தரமாக நடக்கும் இராணுவத்தினர், சிங்களத்தில் தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியும் வருகின்றனர்.

## புலிகள்..

கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் நடைபெறும் இச்சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர். (லோ)

## அரசின்...

சார்பில் சேரசிங்கவும் உறுதிப் படுத்தினா[illegible] எதிர்வரும் சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில வெற்றி பெறும் புதிய சனாதிபதி அடுத்த சமாதான செயலகப் பணிப்பாளரை நியமிப்பதற்காக ஜயந்த தனபால பதவி விலகியதாகக் கூறப்படுகிறது. ஜயந்த தனபால விலகியுள்ள நிலையில் அவரது பணியிடத்துக்கானவரை சிறிலங்கா அரசு இதுவரை வெளியிடப் படவில்லை

## துயர் பகிர்கின்றோம்

### கணபதி நவரட்ணம்



எமது நிறுவனத்தில் பணிபுரியும் வே. செல்வராசா அவர்களின் மாமனார் கணபதி நவரட்ணம் அவர்கள் நேற்றுச் சாவடைந்தார்.

சாவடைந்த கணபதிப்பிள்ளை நவரட்ணம் அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்,பணியாளர்கள்,
ஈழநாதம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.